சட்டமும் நீங்களும்

(LAW AND YOU)

19

குடியியல் சட்ட விளக்கங்கள்

Understanding the Civil Laws

தொகுப்பாக்கம்:

K.G. John

ATTORNEY-AT-LAW

இலவச வெளியீடு:

மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான நிலையம்,
இல: 238, உட்துறைமுக வீதி,
திருகோணமலை.

முகவுரை

மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான நிலையம் ‘‘சட்டமும் நீங்களும்’’ என்ற கையேடுகளின் 17 ஆவதும் 18 ஆவதுமான கையேடுகளை வெளியிடுவதில் பெருமைப்படுகிறது. இந்தக் கையேடுகள் இந் நாட்டின் சாதாரண பிரஜைகளுக்கு தங்கள் வாழ்வை வழிநடத்தும் சட்டங்களைப் பற்றிய அறிவூட்டலை செய்வதற்கு ஏற்ற ஒரு கருவியாக பயன்படுகின்றது.

இது வரையில் நடவடிக்கை பற்றிய எட்டுக் கையேடுகளும் குற்றவியல் பற்றியஎட்டுக் கையேடுகளுமாக 16 கையேடுகள் வெளிவந்துள்ளன. இவற்றை வெளியிடுவதற்கு தேவையான நிதி உதவிகளை வழங்கிய MISEREOR நிறுவனத்திற்கு CPPHR நன்றியைத் தெரிவிக்கின்றது. நடைபெறும் ஆண்டான 2017இல் CPPHR குடியல் விடயம் சார்ந்த இரண்டு கையேடுகளையும் குற்றவியல் சார்ந்த இரண்டு கையேடுகளையும் வெளியிட உள்ளது. இதன் முதல் நடவடிக்கையாக குடியல் பற்றிய கையேடு 17 ஆகவும் குற்றவியல ்பற்றியகையேடு 18 ஆகவும் வெளிவருகிறது.

இந்தக் கையேடுகள் சட்டம் கற்கும் மாணவர்கள் மத்தியிலும், வழக்குத் தொடுநர்களுக்கும், நீதிபதிகளுக்கும், சட்டத்தரணிகளுக்கும், மனித உரிமைகற்கும் மாணவர்களுக்கும், சமூகத் தலைவர்களுக்கும் விநியோகிக்கப்படவுள்ளது. இந்தக் கையேடுகள் பலதரப்பட்டமக்கள் மத்தியில் அதிகம் வரவேற்பைக் கண்டுள்ளது. CPPHR இந்தக் கையேடுகளை தங்களது சட்டவிழிப்புணர்வு கருத்தரங்குகளில் கிராம மட்டங்களிலும் பயன்படுத்துகின்றது.

இக் கையேடுகளுக்கான ஆக்கங்களை அளித்த திரு.K.G யோன் சட்டத்தரணி அவர்களுக்கு CPPHR நன்றி கூறுவதுடன் சாதாரண மக்களின் சட்ட அறிவுக்கு இவை பாரிய பங்களித்துள்ளதை இங்கு கூறி வைக்கிறது.

மேலும் CPPHR இந்தக் கையேடுகளை தன்னுடைய இணையத் தளத்தில் பதிவேற்றியுள்ளது. எங்கள் கைவசம் இருக்கும்

கையேடுகளை விநியோகிக்கும் அதே வேளையில் எங்களது இணையதளத்திலிருந்து இக் கையேடுகளை தரையிறக்கம் செய்யலாம் என்பதையும் அறியத் தருகிறோம். எமது இணையத் தளமுகவரி: www.cpphrtrinco.net இந்தக் கையேடுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

இவை தவிர எங்களிடம் பின்வரும் நியதிச் சட்டங்களும் தமிழில் உள்ளன.

சான்றுக் கட்டளைச் சட்டம்

தண்டனைச் சட்டக்கோவை

குற்றவியல் நடவடிக்கைக் கோவை

இந் நூல்களைப் பெறும் முகவரி:-

மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான நிலையம், 238, உட்துறைமுகவீதி, திருகோணமலை.

தொலைபேசிஇல :- 0263260895
மின்னஞ்சல்:- cpphrtrinco@gmail.com

Foreward

CPPHR is proud to bring forth its “Law & You” series Nos. 17 and 18. These series have become a handy tool for the ordinary citizens of this country to know about the laws that affect their daily lives.

So far 16 booklets have been printed– 8 on civil themes and 8 on criminal themes. CPPHR is much grateful to MISEREOR for providing the needed funds for the publication. For the current year 2017, CPPHR intends publishing 2 booklets on civil matters and 2 on criminal matters. This will be supported by MISEREOR.

These booklets are circulated among law students, prosecutors, judges, Attorneys, Human Rights students and civil leaders. CPPHR has found that these booklets have a wide range of readers. CPPHR also uses these booklets in its legal awareness sessions at the grass-roots.

CPPHR greatly appreciate the support readily provided by Mr. K.G. John who has been contributing much to the legal literacy of the people at grass roots. These articles are written by Mr. K. G. John Attorney at law who has readily consented for the publication of these articles in booklet form.

Further, CPPHR has placed these booklets in its website. While we continue to distribute the available numbers, we also inform that these are available at our website and can be downloaded. Our website is: www.cpphrtrinco.net

The booklets are distributed free of charge.

Also available in Tamil the following legislations:
Evidence Ordinance
Penal Code
Code of Criminal Procedure

The booklets are available at:
Centre for Promotion and Protection of Human Rights, 238, Inner Harbour Road, Trincomalee.

Ph. No. +94 (0) 26 3260895 Email : cpphrtrinco@gmail.com

பொருளடக்கம்

1. நியதிச் சட்டங்களில் காணப்படும் வங்கிகள் காசோலைகள் தொடர்பான சில தகவல்கள்
2. அரச காணிகளை அரசு எவ்வாறு மீளப்பெறலாம்? The state land recovery of possession act
3. காணியுடன் தொடர்புடைய சில பிரச்சினைகளும் அவை தீர்க்கப்படும் முறையும்
4. இலங்கை சட்டத்தில் கொடை பற்றிய தகவல்கள்
5. சோரம் பற்றிய ஓர் ஆய்வு

நியதிச் சட்டங்களில் காணப்படும் வங்கிகள் காசோலைகள் தொடர்பான சில தகவல்கள்

வர்த்தகர்கள் தெரிந்துகொள்ள வேண்டியவை

மதிப்பிழந்த காசோலைக்கு வழக்கு தாக்கல் செய்யலாம்

இன்றைய வர்த்தக உலகில் வங்கிகளும்,காசோலைகளும் வர்த்தகர்களும் முக்கியமானவர்களாக காணப்படுகின்றனர்.சாதாரணமாக கொழும்பில் உள்ள பல வர்த்தக நிலையங்களில் காணப்படும் மதிப்பிழந்த காசோலைகளின் தொகை பல இலச்சக்கணக்கானவையாக காணப்படுகின்றன.அதேபோல் வங்கிகளில் கடன் பெற்றுவிட்டு பின்னர் அதனை மீளப்பெற முடியாமல் தவிக்கும் வங்கிகள் தாக்கல் செய்யும் வழக்குகளும் நீதிமன்றங்களில் ஏராளமானவையாகக் காணப்படுகின்றன.இதேபோல் கடன் அட்டைகளை (Credit Card) வழங்கிய வங்கிகள் மீண்டும் தாம் வழங்கிய பணத்தைப் பெற தாக்கல் செய்யப்படும் வழக்குகளும் பலவுள, இதனால் இன்றைய வர்த்தக உலகிலும் நாளாந்த வாழ்க்கையிலும் வங்கிகளுக்கும் வர்த்தகர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையே நடைபெறுகின்ற வழக்குகளோடு தொடர்புடைய சட்டங்கள் சிலவற்றைப் பற்றி அறிந்துகொள்வது பலனுள்ளதாகும். இது படித்தவர்களுக்கும் பாமரர்களுக்கும் உதவும் என நம்புகின்றோம்.

முக்கியமாகத் தெரிந்துகொள்ள வேண்டிய வழக்குகள்

காசோலை கொடுக்கல்-வாங்கல்களில் மிக மோசடிகள் நடைபெறுவது ஆரம்பகாலத்தில் உக்கிரமாக இருந்தது. அவை சம்பந்தமான பின்வரும் வழக்குகள் மிக

முக்கியமானவை.இவை நடைமுறைக்காக அல்லது அறிவுக்காக படித்துக்கொள்ளவும்.

I. டீ கொஸ்தா எதிர் இலங்கை வங்கி (1969) 72NLR 457.
II. ஆதியப்பா செட்டி எதிர் தோமஸ் குக் (1932) 34 NLR 443.
III. செட்டிநாட்டு வங்கி எதிர் ஆணையாளர் வருமானவரித் திணைக்களம் (1948)
IV. இம்பீரியல் வங்கி இந்தியா எதிர் அபயசிங்க (1927)29NLR 257.
V. இரத்தினம் எதிர் மேர்கண்டயில் வங்கி இந்தியா 57NLR 193.
VI. தம்பிராசா எதிர் மகேஸ்வரி (1961)62 NLR 519.

இவை முன்னர் தீர்க்கப்பட்ட வழக்குகளில் முக்கியமானவையாகும்.

தற்போது பெரும்பாலான வழக்குகள் (கொடுக்கல் - வாங்கல் சம்பந்தமாக) வணிக நீதிமன்றத்தில் நடைபெறுவதோடு மாவட்ட நீதி மன்றங்களிலும், நீதிவான் நீதிமன்றங்களிலும் நடைபெறுகின்றன.

ஒரு சில வழக்குகளை தவிர பெரும்பாலான மாவட்ட நீதிமன்றக் காசோலை வழக்குகள், நீதிவான் நீதிமன்றக் காசோலை வழக்குகளில் சட்டம் பற்றி பெரிதாக விவாதிக்கப்படுவதில்லை.வழக்கை தாக்கல் செய்ததும் எதிராளி குற்றத்தை ஒப்புக்கொண்டு பின்னர் தவணை முறையில் கடனை செலுத்துவதற்கு தவணை வழங்கப்படுகிறது.இப்போது இவ்வழக்குகள் தொடர்கதைபோல் சில நீதிமன்றங்களில் நடைபெற்று வருகின்றன.இதற்கென நியமிக்கப்பட்ட சட்டத்தரணிகள்

நீதிமன்றங்களில் உள்ளன. வங்கிகளில் கடன் பெறும் சாதாரண மக்கள் தெரிந்துகொள்ள வேண்டிய சட்டங்கள் சில உள்ளனர்.அவையாவன.

(அ) காலவரையறைச் சட்டம் 22 ஆம் இலக்கம் 1871

காலவரையறைச் சட்டம் 22 ஆம் இலக்கத்தை ஆரம்பத்தில் கொண்டு இருந்தது. பின்னர் 1889 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தால் அது திருத்தப்பட்டுள்ளது.

I. இச்சட்டத்தின் கீழ் ஈடு சம்பந்தமாக (mortgage of any property) வழக்கு ஒன்றை தாக்கல் செய்ய வேண்டுமாயின் அதனை ஈட்டுறுதி நிறைவேற்றப்பட்ட இறுதித்திகதியிலிருந்து அல்லது கடைசியாக செலுத்தப்பட்ட வட்டியிலிருந்து 10 வருடங்களுக்கிடையில் வழக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

II. ஆயின் நாணய பரிமாற்றுச்சட்டம் bill of Exchange, காசோலை, வாக்குறுதிப்பத்திரம் (promissory note)ஈட்டுறுதி அல்லது எழுத்திலான வாக்குறுதி, ஒப்பந்தம், உடன்படிக்கை ஆகிய சம்பந்தமாக வழக்கைத் தாக்கல் செய்ய வேண்டுமாயின் 6 வருடங்களுக்கிடையில் வழக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

III. சில வேளைகளில் எழுத்தில் இல்லாமல் சில ஒப்பந்தங்கள் செய்வதுண்டு. அப்படியான நிகழ்வுகள் சம்பந்தமாக வழக்கை தாக்கல் செய்ய வேண்டுமாயின் 3 வருட காலத்திற்குள் வழக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

மதிப்பிழந்த காசோலைப்படம்

வங்கியின் பெயர்: திகதி: யாருக்கு:... pay: தொகை:... Amount: கையொப்பம்

காசோலைக்கான வழக்கை எங்கே தாக்கல் செய்ய வேண்டும் என்பது பற்றியுள்ள தீர்ப்பு ஒன்று உள்ளது.

வழக்கு செனவிரத்ன எதிர் தாஹா65NLR page 184

இந்த வழக்கில் எதிராளி பாணந்துறையில் வசிப்பவராவார். இவர் வழக்காளியின் பெயருக்கு காசோலை ஒன்றை வரைந்து பாணந்துறை இலங்கை வங்கிக் கிளைக்கு அப்பணத்தை செலுத்தும்படி கோரியிருந்தார்.

வழக்காளி பாணந்துறை இலங்கை வங்கிக்கிளைக்கு காசோலைக்கான பணத்தை பெறச் சென்ற போது மேற்படி பாணந்துறை கிளை அக்காசோலைக்குத் தேவையான தொகைப்பணம் அவரது கணக்கில் இல்லை எனக் கூறி காசோலையை திருப்பி வழக்காளிக்கு கொடுத்துவிட்டது.ஆகவே வழக்காளி அக்காசோலைக்குரிய பணத்தைப் பெற கொழும்பு மாவட்ட நீதி மன்றத்தில் வழக்கை தாக்கல் செய்து இருந்தார்.

ஆயின் நீதியரசர்களான பஸ்நாயக்கா எதிர் சன்சோனி அவர்கள் பின்வருமாறு தீர்ப்பை வழங்கியிருந்தனர். காசோலை மதிப்பிழந்தது.பாணந்துறை இலங்கை வங்கியினால் ஆகும்.ஆகவே வழக்கெழுகாரணம் (cause of action) எழுந்தது பாணந்துறையிலாகும்.கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திற்கு அவ்வழக்கை விளங்க நியாயாதிக்கம் (jurisdiction)இல்லை என தீர்த்தது.இதனால் வழக்கை தள்ளுபடி செய்ததுடன் வழக்குச் செலவையும் எதிராளிக்கு செலுத்த நீதிமன்றம் வழக்காளிக்கு கட்டளையிட்டது.

ஆகவே மதிப்பிழந்த காசோலைக்கான பணத்தைப் பெற வழக்கைத் தாக்கல் செய்யும் போது கவனமாக தாக்கல் செய்ய வேண்டும்.

iv.நஷ்டஈடு (AnyLoss) இழப்பீடு Damage ஆகியவற்றுக்கான வழக்கை தாக்கல் செய்ய வேண்டுமானால் வழக்கெழுகாரணம் எழுந்து இரண்டு வருடகாலத்திற்குள் வழக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

ஆயினும் மேலேயுள்ள தடைகளை நீக்குவதற்கு வழியுண்டு.எவ்வாறெனில் காசோலையை வழங்குபவரிடமிருந்து எழுத்திலான உறுதியுரையைப் பெற்றால் வழக்கை பொருளை விற்ற இடத்தில் உள்ள நீதிமன்றத்திலேயே தாக்கல் செய்யலாம். இதனை ஆங்கிலத்தில் கூறுவதானால் however these restriction can be avoided if these is any acknowledgement or promise made in writing signed by the party from whom the money is due எனலாம்.

(ஆ) 1840ஆம் ஆண்டு 7ஆம் இலக்க மோசடித் தடுப்புக் கட்டளைச் சட்டம்

மோசடி தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒரு உறுதி மாற்றம்,ஈடுவைத்தல்,ஒப்பந்தம், உடன்படிக்கை உட்பட அதை ஒத்தவை நிறைவேற்றப்படும் போது நொத்தாரிஸ் முன்னிலையிலும் இரண்டு சாட்சிக்காரர்கள் முன்னிலையிலும் ஒரே நேரத்தில் ஒப்பந்தத்தில் ஈடுபடும். தரப்பார் இருவரும் கையொப்பம் இட வேண்டும் என சட்டம் கூறுகிறது.

ஆனால் இறுதி விருப்பாவணம் நிறைவேற்றப்படும் போது நொத்தாரிஸ் அவசியமில்லை.5 சாட்சியாளர்கள் முன்னிலையில் அது நிறைவேற்றப்பட வேண்டும்.அவ்வாறு நிறைவேற்றப்படும் ஆவணங்களையே வங்கிகள் பெறுமதியுள்ளவையாகக் கருதும். ஆகவே வங்கியுடன் ஒப்பந்தம் செய்யும் போது இது கவனிக்கப்படும்.

(இ) வயது வந்தோர் கட்டளைச் சட்டம்.7ஆம் இலக்கம் 1865.

இச்சட்டத்தின் கீழ் 21 வயது வந்தவர்களே வயது வந்தவர்களாகக் கருதப்படுவர்.ஆயினும் சில சட்டத்தினால் அந்த வயது வராத போதும் அவர்கள் வயது வந்தவர்களாகக் கருதப்படுவதுண்டு. உதாரணமாக “venia Aetatis” என்ற 17 ஆம் இலக்க 1989 ஆம் ஆண்டு கட்டளைச் சட்டத்தின் கீழ் வயது வந்தவர்கள் எனக் கருதப்படுவார்கள் 21 இலிருந்து 18 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

ஆயின் இந்த வயதெல்லையானது ஏனைய சட்டங்களின் கீழ் வயது வந்தோர் பெறும் நன்மைகளை அவர்களுக்கு கொடுக்கும் என கருதப்பட மாட்டாது

என்பது குறிப்பிடத்தக்கது.however this amendment does not affect the right of any person under 18 years to age to receive any benefit is entitled he is ender any other law.வங்கிகள் 18 வயதானோருக்கு கடன் கொடுக்க சில நேரங்களில் மறுப்பது இதனாலேயேயாகும்.

(ஈ) money lending ordinance no:2 of 1918

மேற்படி கட்டளைச் சட்டத்தின் 2ஆம் பிரிவு கூறுவது என்னவெனில் நீதிமன்றத்தில் மேற்படி கட்டளைச் சட்டத்தின் கீழ் கடனை அறவிடும் வழக்கொன்றைத் தாக்கல் செய்தால் அந்த வழக்கில் வழக்காளி கேட்கும் பணத்தொகை மிகக் கூடுதலானதா (excessive) அல்லது அசாதாரணமானதா (unfair) அல்லது அந்த ஒப்பந்தமானது தகாத செல்வாக்கால் அல்லது பயமுறுத்தலால் அல்லது வெற்றுப்பேப்பரில் கையொப்பம் பெறப்பட்டுள்ளதா? என்றெல்லாம் பார்க்க வேண்டும் என்று கூறியுள்ளது.

மேலும் நீதிமன்றமானது கவனிக்க வேண்டியது என்னவெனில் எச்சந்தர்ப்பத்திலும் வட்டித்தொகை முதலை விட கூடுதலாக இருக்கிறதா?எனப்பார்க்க வேண்டும்.

ஆயின் இச்சட்டத்தின் 7ஆம் பிரிவு கூறுவது என்னவெனில் இச்சட்டத்தின் கீழ் நடைபெறும் கொடுக்கல்-வாங்கல் பதிவுசெய்யப்பட்ட வங்கிகளுக்கும் கடன் கொடுக்கும் நிறுவனங்களுக்கும் செல்லாது என்றாகும்.

சிலர் என்னிடம் வினவுவது உண்டு.அது என்னவெனில் 18 வயது ஆன எனது மகனுக்கு வங்கிகள் கடன்

கொடுக்க முன்வருவதில்லை ஏன் என்றாகும். மேலே கூறியதே அதற்கு காரணமாகும்.

(உ) காணி அபிவிருத்திச் சட்டம் 19ஆம் இலக்கம் 1935

காணி ஆணையாளர் அரச காணி சம்பந்தமாக வருடாந்த அனுமதிப்பத்திரத்தை அல்லது அளிப்பை(Grant) வழங்கலாம்.அளிப்பு அதி உத்தம ஜனாதிபதியினால் வழங்கப்படுகிறது.உரித்தைப் பொறுத்தவரை வங்கிகள் மேற்படி பத்திரம் வருடாந்த அனுமதிப்பத்திரமா?அளிப்புப் பத்திரமா என்பதை கவனமாக பரிசீலிக்கவேண்டும். வருடாந்த அனுமதிப்பத்திரமாக இருந்தால் உரித்தை வங்கிகள் ஏற்க முடியாது.

அளிப்பை வைத்துள்ள ஒருவர் அக்காணியை ஈடுவைப்பதானால் மக்கள் வங்கி,அரச ஈட்டு வங்கி அத்துடன் குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்களில் மட்டும் தான் ஈடுவைக்கலாம் என 1969 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க காணி அபிவிருத்திச் சட்டத்தின் திருத்தம் கூறுகிறது.

(ஊ) வங்கிகள் தமது கடன்களை மீளப் பெறும் (விசேட சட்டம்) 4ஆம் இலக்கம் 1990 RECOVERY OF LOANS BY BANK (SPECIAL PROVISIONS) ACT NO 4.1990.

மேற்படி சட்டம் வங்கிகளுக்கு ஒரு விமோசனத்தை அளிக்கும் சட்டமாகும்.தங்களிடம் கடனை பெற்றுக்கொண்டு கடனை திருப்பிச்செலுத்தாமல் இருக்கும் கடனாளிகளை சட்டப்படி வெளியேற்றி கடனுக்கு ஈடாக வைத்த சொத்தை வங்கிகள் தம் உடமையில் வைத்திருக்க வசதி வழங்கும்

சட்டமாகும்.இச்சட்டத்தின்படி வர்த்தக வங்கிகள் தாம் வழங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தாமல் காலத்தை வீணடித்துக் கொண்டிருக்கும் கடனாளிகள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும் சட்டமாகும்.

இதன் கீழ் வங்கிப் பணிப்பாளர்கள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி தம்மிடம் கடன் பெறுவதற்கு ஈடாக வைத்த சொத்தை விற்று பணத்தை அறவிடுமாறு கேட்டு ஏலம் விடும் நபருக்கு அனுமதி அளிக்கலாம்.அல்லது எந்த நபர் ஒருவருக்கும் மேற்படி கணக்குகள் சென்று உடமையை கையேற்றுக்கொள்ளவும் காணி உரிமையாளர் வங்கிக்குச் செலுத்த வேண்டிய கடன் தொகை முழுவதையும் செலுத்திய பின்னர் அக்காணியை விடுவிக்கவும் அனுமதியளிக்கிறது.

வங்கி மேற்படி நடவடிக்கைகளை எடுக்கப்போவதாக பணிப்பாளர்கள் ஒரு தீர்மானத்தை (resolution) நிறைவேற்றவேண்டும்.அந்த தீர்மானத்தை வர்த்தகமானியிலும் குறைந்தது மூன்று பத்திரிகைகளில் சிங்களம்,தமிழ்,ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் பிரசுரிக்க வேண்டும்.

தீர்மானத்தின் பிரதி ஒன்றை கடன் பெற்ற வருக்கும் அனுப்பவேண்டும்.இந்த கட்டடம் அரசுக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தால் அவ்வறிவித்தலின் பிரதி ஒன்று காணி ஆணையாளருக்கும் அனுப்பப்படவேண்டும்.

காணி விற்பனை பற்றிய மேற்படி அறிவித்தலை வர்த்தமானியில் வெளியிட்டதன் பின்னர் குறைந்தது 14 நாட்களுக்கு பின்னரே வங்கிகள் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.ஆயினும் இக்காணியை கடன் கொடுத்த வங்கியே ஏலத்தில் வாங்கலாம்.

விற்பனையின் பின்னர் பெற்ற பணம் கடன் கொடுத்த பணத்தை விட கூடுதலாக இருப்பின் கடன் பணத்தை எடுத்துக்கொண்டு மீதிப் பணத்தை காணி உரிமையாளருக்கு வங்கி கொடுக்க வேண்டும்.விற்பனையின் பின்னர் வங்கி பணிப்பாளர்கள் அக்காணி ஏலத்தில் விற்கப்பட்டதாக ஒரு உறுதியை எழுதி காணியை பெற்றவருக்கு வழங்க வேண்டும்.

சில சந்தர்ப்பங்களில் வங்கிகள் அக்காணியை இன்னுமொருவருக்கு விற்பதற்கு முன் (re-sale) உரித்தை இழந்த காணிக்காரர் அதனை மீள பெறவிரும்பினால் கடனை செலுத்திவிட்டு காணியை மீளபெற அனுமதி அளிக்க வேண்டும்.

இந்த சட்டம் இலங்கை வங்கி,மக்கள் வங்கி, பிராந்திய அபிவிருத்தி வங்கிகளுக்கு செல்லுபடியாகாது.ஆயினும் பிராந்திய அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு செல்லுபடியாகும்.

(எ) கடனை மீளப்பெறுதல் சட்டம் 2 இலக்கம் 1990ஆம் அதன் திருத்தமுமான இலக்கம் 9 ஆம் 1994 ஆம் ஆண்டினதுமானது

THE DEBT RECOVERY ACT NO-20F 1990 AMENDED BY ACT NO.9 OF 1994.

இந்தச் சட்டத்தில் பின்வரும் முதலும் பிரிவுகள் முக்கியமானவையாகும்:

2,4,5,6,11,13,15,21ஆகும். முதலும் வட்டியும் 150,000/=க்கு மேல் வங்கிக்கு செலுத்த வேண்டுமானால் இச்சட்டப்பிரிவுகளை வங்கிகள் பயன்படுத்தலாம்.

4ஆம் பிரிவின்படி (2) நீதிமன்றத்திற்கு வழக்கை தாக்கல் செய்யும் வங்கி உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அதற்குரிய முத்திரை வரியையும் செலுத்திய பின்னர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.ஆனால்,வங்கி சமர்ப்பிக்கும் ஆவணங்களில் எந்தத் திருத்தமோ,அழிக்கப்பட்டோ மற்றும் காலவரம்புச் சட்டத்திற்கு மேற்பட்டதாகவோ இருக்கக் கூடாது.நீதிமன்றம் வங்கியின் பிராதை அல்லது மனுவை ஏற்றுக்கொண்டால் பின்னுறுதிக் கட்டளையை (DECREENISI)ஐ ஆக்கலாம்.

5ஆம் பிரிவின்படி நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட பின்னுறுதிக்கட்டளையை வங்கிகளின் நகர்தல் மூலம் பிஸ்கால் மூலம் கடனாளிக்கு சமர்ப்பிக்கலாம் அல்லது பதிவுத்தபாலில் அனுப்பலாம்.எதிராளி 6ஆம் பிரிவின்படி கடனாளி நீதிமன்றத்திற்கு தோன்ற வேண்டும்.தோன்றி மேற்படி பின்னுறுதிக் கட்டளையை ஏற்கமுடியாமைக்குரிய காரணங்களை (SHOW CAUSE) நீதிமன்றத்திற்குக் காட்ட வேண்டும்.இது சத்திய உரை மூலமே காட்டப்படவேண்டும். தான் இப்பின்னுறுதிக்கட்டளையை ஆட்சேபிப்பதற்குரிய காரணத்தை காட்டலாம்.

நீதிமன்றம் குறித்ததொரு தொகையை நீதி மன்றத்திற்கு வைப்பில் இடும்படி அல்லது பிணையாக வைக்கும்படி கூறினால் அதன் பின்னர் எதிராளி தனது வாதங்களை முன்வைக்கலம்.

பிரிவு 11 இன் படி வங்கியானது பின்னுறுதிக் கட்டளையை மோசடியாக அல்லது நிகழ்வுகளை மறைத்துப் பெற்றிருந்தால் நீதிமன்றம் பின்னுறுதிக் கட்டளையை இரத்துச்செய்யும்.அத்துடன் எதிராளிக்கும்

நியாயமான இழப்பீட்டை கொடுக்குமாறும் கட்டளையிடும்.

பிரிவு 13இன்படி பின்னுறுதிக் கட்டளை இறுதிக் கட்டளையாக (ABSOLUTE)உறுதிப் படுத்தப்பட்டால் அந்தக் கட்டளை நீதிமன்றின் ஆணையாக கருதப்படும்.

பிரிவு 15இன்படி நீதிமன்றம் பின்னுறுதிக்கட்டளையை ஆக்கிய பின்னர் கடன் பெற்றவர் தனது மேற்படி காணியை இன்னுமொருவருக்கு கைமாற்றம் செய்திருந்தால் பின்வரும் சந்தர்ப்பங்கள் தவிர மற்றும்படி அம்மாற்றம் வெற்றும்வெறிதாகும்.

அ) எதிராளி பின்னுறுதிக் கட்டளையில் குறிக்கப்பட்ட பணத்தை செலுத்தியிருந்தால்

ஆ) பின்னுறுதிக் கட்டளையை நீதிமன்றம் அழித்திருந்தால்.

இ) வங்கியானது மாற்றிக் கொடுத்த உறுதியை அங்கீகரித்திருந்தால்.

காணி மாற்றம் செல்லுபடியாகும்.இல்லையேல் மாற்றம் வெறிதாகும்.

மதிப்பிழந்த காசோலை சம்பந்தமாக தெரிந்துகொள்ள வேண்டியவை.

மதிப்பிழந்த காசோலை சம்பந்தமாக ஆரம்ப காலத்தில் நீதிவான் நீதிமன்றத்தில் அல்லது மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படுவதில்லை.ஆனால் தற்போது THE DEBT RECOVERY ACTஇன் கீழ் வழக்கை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம்.இவ்வாறு தாக்கல் செய்வதற்கு வழிவதுத்த

வழக்கு பதுளையில் நடந்து பின்னர் உயர் நீதிமன்றத்தில் மூன்று நீதியரசர்கள் விளித்து வழங்கிய தீர்ப்பில் இருந்து பெற்ற வழக்காகும்.

பதுளையில் ஒரு குறித்த கூட்டுறவுச் சங்கம் உருளைக்கிழங்கு விதைகளை பெற்றபோது வழங்கப்பட்ட காசோலைக்குப் பணம் இல்லாமல் மதிப்பிழந்ததால் அக்காசோலைக்கான வழக்கை பொலிஸார் நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர்.எதிராளி குற்றவாளியாக காணப்பட்டார்.பின்னர் எதிராளி இதனை பதுளை மேல்நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்தார்.முறையீட்டில் எதிராளி குற்றவாளி இல்லை என தீர்க்கப்பட்டதுடன்DEBT RECOVERY ACTஇன் கீழ் இந்த வழக்கு வராது என்றும் ஏனெனில் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கே LENDING INSTITUTIONSகளுக்கே இச்சட்டம் செல்லும்.ஆதலால் இவ்வழக்கை தள்ளுபடி செய்வதாக பதுளை மேல் நீதிமன்றம் கூறியது.

இதனை எதிர்த்து அரசு உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்தது.மேன்முறையீட்டில் எழுந்த வினா DEBT RECOVERY ACTஇன் கீழ் இவ்வழக்கு வருமா? என்பதேயாகும்.எதிராளியின் வாதம் இச்சட்டம் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு மட்டுமேயுரியது என்றும் சாதாரண மனிதர்களது கொடுக்கல் வாங்கல்களுக்கு இச்சட்டம் செல்லாது என்றும் வாதிட்டார்.உயர் நீதிமன்றம் 2:1 எனப் பிரிந்து இச்சட்டம் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு மட்டுமல்ல சாதாரண மனிதனையும் கட்டுப்படுத்தும் என்றும் கூறியது.இதனால் இச்சட்டம் தற்போது சகல நீதிமன்றங்களிலும் தாக்கல் செய்யும் வழக்குகளையும்

விளங்கி தீர்ப்பை வழங்கி வருகிறது.ஆகவே மதிப்பிழந்த காசோலையை வைத்திருப்பவர் பொலிஸில் முறையிட்டு வழக்கை தாக்கல் செய்யலாம்.அல்லது தனிப்பட்ட சட்டத்தரணி ஒருவரை சந்தித்து பிரத்தியேக பிராது (private plaint)மூலம் இவ்வழக்கை தாக்கல் செய்யலாம். இவ்வாறு செய்வதன்மூலம் அவரது பணத்தை அவர் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் சிவில் வழக்கு மூலமும் தனக்கு வர வேண்டிய பணத்தை அறவிடலாம்.

இன்றைய சட்டநிலை அதுவேயாகும்.ஆகவே இன்றைய நிலையில் DEBT RECOVERY (SPECIAL PROVISIONS)ACT.NO.2OF 1990 கடனை திருப்பிப்பெற விரைவான சட்ட நடவடிக்கைகளை எடுக்கும் முறையே கூறுவதுடன் வங்கியின் பணம் இல்லாமல் காசோலை வழங்குவது குற்றமென்றும் அது குற்றவியல் நடவடிக்கைக்குள் வருகிறது என்று கூறுகிறது.

ஆயின் பலர் விசேடமாக வர்த்தகர்கள் இவ்வாறு மதிப்பிழந்த காசோலையை வைத்துக் கொண்டு என்னசெய்வது என்று சஞ்சலப்பட்டுக் கொண்டு இருப்பதை நாம் காணலாம்.வழக்குக்குச் சென்றால் தமது வியாபார நிலையத்தின் நாமம் கெட்டுவிடும் என்றும் அத்துடன் சட்டத்தரணிகளுக்குக் கொடுக்கும் பணமும் வீணாகும் என்றும் அவர்கள் கருதுவதும் உண்டு.

அதில் ஒரு உண்மையும் உண்டு.சில சொத்துள்ள வர்த்தகர்கள் தங்கள் பெயரில் வங்கிக் கணக்கை வைத்துக்கொள்ளாமல் தங்களது கடையில் சேவைபுரியும் நம்பிக்கைக்குரியவர்களின் பெயரில்

வங்கிக்கணக்கொன்றை திறந்து அவர்களது காசோலைகளை கொடுத்து பொருட்களை கடனுக்குப் பெறுவதும் உண்டு வழக்குத்தாக்கல் செய்தால் பணம் ஒன்றையும் அறவிடமுடியாது என்பதுடன் அப்பாவியான ஒருவர் சிறைக்குச் செல்லவும் வழியேற்படும் எனவும் அவர்கள் நினைப்பதும் உண்டு.

ஆகவே எப்போதும் காசோலை வியாபாரம் ஆபத்தானது என்பது உண்மை.ஆனால் காசோலைக்கு (கடனுக்கு) வியாபாரம் செய்வதில்லை என்று கூறினால் வியாபாரமே நடைபெறாது.

ஆகவே கடனுக்கு கொடுத்தே ஆகவேண்டும். சிலவேளை அதனால் வரும் நட்டங்களையும் பெற்றே ஆக வேண்டும்.

இவ்வாறு எவ்வளவு சட்டங்கள் இருப்பினும் இலங்கை வர்த்தகர்கள் பெரும்பிரச்சினைகளை சமாளிக்க வேண்டிய நிலையில் உள்ளார்கள் என்று மட்டும் கூறலாம்.

இந்தியாவில் இந்நிலை இல்லை.இந்தியாவில் காசோலையானது கரன்சி நோட்டுக்கு சமனாக மக்களால் கருதப்படுகிறது.நடை முறையில் உள்ளது.

தொகுப்புரை

இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தில் இருந்தபோதும் அரபிக் கடலின் மூலம் பல வர்த்தகங்கள் நடைபெற்றபோதும் பணப்புழக்கம் ஆதியில் சூன்யமாகவே இருந்தது.கிராமங்களில் விளையும் பொருட்கள் பண்டமாற்று முறையிலேயே விற்பனை செய்யப்பட்டன.ஆயினும் பணப்புழக்கமானது வியாபார

நிலையங்களாக கருதப்பட்ட கரையோர மாகாணங்களின் துறைமுகங்களிலேயே நடைபெற்றது.

ஆயினும் இன்று நாம் காணும் வங்கிகாசோலை முறைகள் சீட்டு (CHEETUS)மூலம் கடன் வழங்கும் முறையிலேயே இலங்கையில் அறிமுகமானது.விசேடமாக இந்தியாவில் இது அறிமுகப்படுத்தப்பட்டது என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

போர்த்துகேயர்,ஒல்லாந்தர் இலங்கையை ஆண்ட காலத்தில் (1505 -1656) வரையிலான காலப்பகுதியில் பெரிதாக இங்கு பணம் பரிமாறப்படவில்லை.

ஆங்கிலேயர் காலத்திலும் இலங்கையில் கிட்டத்தட்ட 50 வருடகாலத்தில் வங்கிகள் திறக்கப்படவில்லை.கடனுக்கு கொடுக்கும் பழக்கம் இருக்கவில்லை.

1841 இல் இலங்கை வங்கி திறக்கப்பட்டது.வெளிநாட்டு முதல் இங்கு கொண்டு வரவும் ஏற்பாடு செய்யப்பட்டது. கோப்பிச் செய்கை வளர்ச்சியால் வங்கிகள் தமது செயற்பாடுகளை விஸ்தரிக்க வேண்டியிருந்தது.

இலங்கை சுதந்திரமடைந்த பிறகு இலங்கை மத்திய வங்கி 1949 இல் ஆரம்பிக்கப்பட்டது. ஐக்கிய அமெரிக்காவில் உள்ள MR.JOHN EXTER இன் உதவி பெறப்பட்டு இலங்கையில் மத்தியவங்கி செயல்பட 1950 ஆகஸ்ட் மாதத்தில் இருந்து தொடங்கியது.

அதற்குப் பின்னர் பணப்புழக்கம் அதிகரித்ததால் வங்கிகளும் விரிவடையத் தொடங்கின.இதனால் பல உள்நாட்டு வங்கிகளும் வெளிநாட்டு வங்கிகளும்

இங்கு இயங்கத் தொடங்கியதுடன் காசோலைகளின் புழக்கமும் அதிகரிக்கத் தொடங்கியது.

நாளடைவில் கரன்சிக்கு நிகராக காசோலைகள் புழக்கத்தில் வரத் தொடங்கின. இதன் பலனாக காசோலைகளில் பல தில்லு முல்லுகள் நடைபெறத் தொடங்கின.அதன் பலனாவே இன்று வழக்குகள் நீதிமன்றங்களில் நடைபெறுகின்றது. பணம் இன்றி காசோலைகள் வழங்கப்படுகின்றன.இவற்றில் ஒன்று பணம் வங்கியில் இல்லாமல் காசோலைகளை வழங்குவதாகும்.ஆரம்ப காலத்தில் இந்த தவறானது சிவில் குற்றமாக கருதப்பட்டபோதும் தற்போது கிரிமினல் குற்றமாகவே கருதப்படுகிறது.

இப்போது இன்னும் ஒரு தவறும் நடைபெறுகிறது.வங்கிகள் கடன் அட்டைகளை வழங்குவதும் அதனை பலர் கடன் வைப்பதும் கடன் அட்டைகளுக்குப் பணம் செலுத்தாமல் விடுவதுமாக வங்கிகளின் நடவடிக்கைகள் வியாபித்துள்ளன.

அரச காணிகளை அரசு எவ்வாறு மீளப் பெறலாம்? The State Land Recovery of Possession act

தற்போது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் மிக முக்கியமான பிரச்சினைகளாக சிலவற்றை கூறலாம். குடியிருக்க நிலம் இல்லாமல் இருப்பாருக்கு காணிகளை வழங்குதல், வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு தொழிலை பெற்றுக்கொடுத்தல், கல்வி வசதியற்ற பிள்ளைகளுக்கு கல்வியூட்டுதல், தரமான வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்கு வசதியாக வாழ்க்கைச் செலவை அமைத்தல் என்பன உட்பட இன்னும் சில முக்கியமானவை அரசு நோக்கும் பிரச்சினைகளாக விளங்குகின்றன.

இப்பிரச்சினைகளின் தாக்கம் இலங்கையிலும் நிலவுவதை நாம் காணலாம். இவற்றை நீக்குவதாக ஆட்சிக்கு வரும் அரசுக்கள் வாக்களித்த போதும் அவற்றை நீக்க முடிவதில்லை. விசேடமாக இருப்பதற்கு இல்லிடம் வழங்குவது மிகக் கஷ்டமாக இலங்கையில் விளங்குவதை நாம் காணலாம். வருடம் தோறும் சனத் தொகைப் பெருக்கத்திற்கு அமைய காணிகள் விரிவடைவதில்லை. உள்ள காணிகளும் பலரால் பலாத்காரமாக அரசியல் செல்வாக்கால் கவரப்பட்டும் விடுகின்றன. இவற்றை மீளப் பெற்றால் ஓரளவு காணிப்பிரச்சினையை தீர்க்கலாம் என்ற கருத்து பலரிடையே காணப்படுகிறது.

ஆனால் உள்ள ஒருவரிடம் இருந்து அரசகாணியை மீளப்பெறுவது என்பது இலகுவான காரியமல்ல. ஏனெனில் இலங்கை அரசியலமைப்பில் உள்ள அரச

வழிகாட்டல் கொள்கையின் பெரும்பகுதி குடும்ப அலகை பாதுகாக்கும் நோக்கத்தை தெளிவாக கொண்டுள்ளதை நாம் காணலாம். ஆகவே அத்தகைய அரசியலமைப்பை கொண்டுள்ள இலங்கையில் பலாத்காரமாக அல்லது சட்டவிரோதமாக வாழுகின்றவர்களிடமிருந்து அரச காணிகளை மீளப்பெறும் போது சட்டத்தை சற்றேனும் மீறாமல் சட்டப்படியே அரசு அவற்றை மீளப்பெற வேண்டும். ஏனெனில் காணியானது ஒரு மனிதனின் உயிர் வாழும் உரிமையுடன் தொடர்புடையது என்பதால் நீதிமன்றங்கள் அரசாங்க அதிகாரிகள் சட்டத்திற்கமைய காணிகளை மீளப்பெறுகிறார்களா? என்பதை கவனித்து கொண்டு இருக்கின்றன. சில தவறுகள் இருப்பினும் மீளப்பெற்றதை இரத்துச் செய்கின்றனர்.

அரச காணியாயின் பலாத்காரமாக அல்லது அனுமதியில்லாமல் குடியிருக்கும் ஒருவரை அங்கிருந்து அரசு அகற்ற வேண்டுமாயின் அரசுhe state lands (Recovery of possession) Act ன் பிரிவுகளுக்கமையவே காணியை மீளப்பெற வேண்டும்.

இன்று நாம் பார்க்கப்போவது மேற்படி சட்டத்தின் கீழ் ஒரு காணியை மீளப்பெற அரசு எடுக்கும் நடவடிக்கைகளை பற்றியேயாகும். பலருக்கும் இது பிரயோசனமானதாகும்.

சில நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் இவ் வழக்குகள் நீண்டு கொண்டுபோவது வழக்கம். அதற்கு காரணம் சில சட்டப் பிரச்சினைகளாகும். ஆனால் ஒரு உண்மையை எல்லோரும் ஏற்றுக் கொள்ளவேண்டும். அரச காணி ஒன்றில் அனுமதி இல்லாமல் விசேடமாக permit இல்லாமல் ஒருவர் குடியிருந்தால் அவர் கட்டாயம் என்றோ ஒருநாள் நீதிமன்றத்தால்

வெளியேற்றப்படுவார் என்பதேயாகும். ஆகவே இச் சட்டத்தைப் பற்றி நன்கு தெரிந்து கொண்டால் வீணாக ஆலோசனைகளை பெற்று பணத்தை நீதிமன்றத்திற்கு ஒருவர் செலவு செய்ய மாட்டார் என்று கூறலாம்.

மீளப்பெறும் சட்டத்தின் செல்லுபடியாகும் தன்மை

அரச காணிகளை மீளப்பெறும் சட்டத்தின் 2 ஆம் பிரிவு பின்வருமாறு கூறுகிறது.

இச்சட்டத்தின் பிரிவுகள் சகல அரச காணிகளுக்கும் செல்லுபடியாகும்.

அரச காணியில் குடியிருப்பவர் ஒருவர் எப்போதும் இச்சட்டத்தின் கீழ் கட்டுபட்டவர் ஆவார்.

அரச காணி

அரச காணியென்பது அரசுக்கு பரிபூரணமான உரித்துடைய காணியாகும். இவை திணைக்களங்களுக்கு சொந்தமாக இருக்கலாம். உள்ளூராட்சி மன்றங்களுக்கு சொந்தமாக இருக்கலாம். அதிகார சபைகளுக்கு சொந்தமாக இருக்கலாம். மகாவலிகங்கை கல்லோயோ அபிவிருத்தி சபை, ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்தி சபை போன்ற சகல அரசாங்கக் கட்டுப்பாடுள்ள அமைப்புகளுக்கு பரிபூரணமான உரித்துள்ள காணிகளாக இருக்கலாம். ஆகவே தனிப்பட்டவர்களின் காணியில்லாத ஏனைய காணிகள் அரச காணிகள் என்ற வகைக்குள் வருகின்றன எனவும் ஓரளவு கூறலாம். அரச காணிகளே இலங்கையில் கூடுதலாக இருக்கின்றன.

இத்தகைய காணிகளில் குடியிருப்பவர்களை எவ்வாறு அகற்றலாம் என்பது இலங்கையில் பிரச்சினையான ஒரு

விடயமாகும். அகற்றுவது மனித உரிமை மீறல் எனவும் கூறலாம்.

சாதாரண மக்கள் வாழ்க்கையில் அரசியல் செல்வாக்கு மிகுந்து காணப்படும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். அரசியல் தலைவர்கள் தத்தமது ஆதரவாளர்களுக்கு சட்டத்திற்கு புறம்பாக கடிதம் மூலமும் காணிகளை வழங்கியுள்ளதை காணலாம். பாராளுமன்ற கடிதத் தலைப்பில் (letterhead) கூட இவ்வாறு கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆகவே சாதாரண அரச ஊழியர்கள் இவர்களை வெளியேற்ற பின்நிற்பது தவிர்க்க முடியாததொன்றாகும். ஆனாலும் இந்த சட்டத்தை இலங்கை அரசு 1983 ஆம் ஆண்டு மேற்படி கடிதங்களை 29 இலக்க சட்ட மூலம் அங்கீகரிக்கத் தேவையில்லை என்று கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. அவ்வாறு குடியிருப்பவர்கள் சட்ட பூர்வமற்ற குடியிருப்பாளர் என்றே சட்டம் கூறுகிறது. இத்தகைய நிலையில் அரச ஊழியர்களுக்கு சட்டவிரோதமாக குடியேறியுள்ளவர்களை நீதிமன்றம் மூலமே வெளியேற்ற முடியுமே தவிர வேறு வழிகளால் இலகுவில் வெளியேற்ற முடியாது. நீதிமன்றத்திலும் சட்டப் பிரச்சினை எழுவதால் அவர்களை இலகுவில் வெளியேற்றுவது கஷ்டம்.

மீளப்பெறும் சட்டத்தின்மூலம் எவ்வாறு சட்டவிரோதமான உடமையாளர்களை வெளியேற்றலாம்?

முதலாவதாக செய்ய வேண்டியதென்னவென்றால் அத்தகைய சட்டவிரோத குடியிருப்பாளர்களை காணிகளிலிருந்து வெளியேறுமாறு அறிவித்தல் கொடுக்க வேண்டும். அல்லது அவர்கள் குடியிருக்கும் காணியின் துளாம்பரமான ஒரு இடத்தில் ஒரு குறித்த காலத்திற்கு இடையில் காணியில் நின்றும் வெளியேற

வேண்டும் என்று அறிவித்தல் ஒட்ட வேண்டும். 1983 ஆம் ஆண்டு பிரிவு 1A யின் படி காணியில் குடியிருப்பவர்கள் எவ்வித உரிமைத்துவத்தையும் கேட்க முடியாது. ஆகவே அவருக்கு உள்ள ஒரேஒரு வழி அவர் நீதிமன்ற நடவடிக்கையை நாடுவதை தவிர வேறு ஒன்றுமில்லை.

இவ்விடத்தில் கவனிக்கவேண்டிய இன்னுமொரு விடயம் காணியில் குடியிருப்பாளர் மட்டுமல்ல அவரில் தங்கி வாழ்பவர்களும் (Dependants) இருக்க முடியாது என்பதாகும். 1979 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க சட்டத்தின் 4(B) யின் படி தங்கி வாழ்பவர் என்று அவரது நேரடி உறவினர் மட்டும் அல்ல அவர் தங்கிவாழ அனுமதி அளித்துள்ளவர்களையும் உள்ளடக்கும் என்பதாகும். வாடகை குத்தகைக்கு பெற்றவர்களும் வெளியேற வேண்டும். வெளியேறும் அறிவித்தல் கிடைத்த பின்னரும் குறித்த திகதியில் காணியில் இருப்பவர் அல்லது அவரில் தங்கி வாழ்பவர் வெளியேறாவிட்டால் தகுதி வாய்ந்த அதிகாரி (Competent Authority) நீதிவான் நீதிமன்றத்தில் காணியில் இருப்பவரை வெளியேற்றுமாறு கேட்டு விண்ணப்பம் ஒன்றை செய்யலாம்.

இந்த விண்ணப்பத்தை தகுதிவாய்ந்த அதிகாரி அல்லது தகுதி வாய்ந்த அதிகாரியில் அதிகாரம் அளிக்கப்பட்டவர் மேற்படி காணியை பெற நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யலாம்.

“Competent Authority”**தகுதிவாய்ந்த அதிகாரி என்பது யார்?**

அரச காணியை மீளப்பெறும் சட்டத்தின் ஆணி வேராக இருப்பவர் தகுதிவாய்ந்த அதிகாரியேயாவார். ஆகவே தகுதி வாய்ந்த அதிகாரி “Competent Authority” என்பவர் யார் எனப்பார்ப்போம். பின்வருவோர் தகுதி வாய்ந்த அதிகாரியாக இருப்பார் என 1979 ஆண்டு 18ஆம் இலக்க சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

இவர்கள் யார் என்பது தெரிந்து வைத்து கொள்ள வேண்டும். அது அவசியம்.

(அ) அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர் தகுதி வாய்ந்த அதிகாரி.

(ஆ) பொது முகாமையாளர், ரயில்வே திணைக்களம் புகையிரத காணிகளில் இருந்து வெளியேற்ற உரித்துடையவர். தகுதி வாய்ந்த அதிகாரி.

(இ) தேசிய வீடமைப்பு ஆணையாளர், வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள காணிகளை வெளியேற்றுபவர். தகுதி வாய்ந்த அதிகாரி.

(ஈ) உள்ளூர் ஆட்சி ஆணையாளர், உள்ளூராட்சி திணைக்களத்தின் கீழ் உள்ள காணியில் இருந்து வெளியேற்ற உரித்துள்ளவர். தகுதி வாய்ந்த அதிகாரி.

(உ) அரசாங்க அதிபரால் அதிகாரம் அளிக்கப்பட்ட பகிரங்க உத்தியோகஸ்தர் (Public Officer) ஆகியோரேயாவார். தகுதி வாய்ந்த அதிகாரிகள் அரச ஊழியர்களாக இருக்க வேண்டும்.

(ஊ) இராணுவத் தலைவர் (Commander of the Army) இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள காணிகளில் இருந்து வெளியேற்ற உரித்துள்ளவர்.

(எ) கடற்படை தளபதி (Commander of the Navy)

(ஏ)விமான படைத் தளபதி (Commander of the Air Force)

(ஐ) தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவர்.

(ஒ) அரசாங்க நிறுவனங்களின் அதிகாரிகள்.

(ஓ) விவசாய இலாகா பிரதம அதிகாரி (Director General of Agriculture)

(ஔ) அரசாங்க சட்டத்தால் உருவாக்கப்படும் நிறுவனங்களின் பிரதானிகள் ஆகியோர் தகுதி வாய்ந்த அதிகாரிகள் என சட்டம் ஏற்றுக் கொள்கிறது. மேலே கூறியுள்ளவர்களே தகுதி வாய்ந்த அதிகாரிகளாக கருதப்படுவர்.

இதில் கவனிக்க வேண்டிய விடயம் என்னவெனில் தகுதிவாய்ந்த அதிகாரிகளான இவர்கள் காணியில் உள்ளவர்களை அல்லது அவர்களது பிரதிநிதிகளை வெளியேற்ற வேண்டும் என்ற அபிப்பிராயத்தை அல்லது தீர்மானத்தை கொள்ள வேண்டும். அதேபோல் அவர்கள் நேரடியாக நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்ய முடியும். அல்லது அவர்கள் வேறு அதிகாரிகளுக்கு தனது அதிகாரத்தை கையளித்து அவர்கள் மூலம் வெளியேற்றும் நடவடிக்கையை எடுக்க நீதிமன்றத்தை கேட்டுக் கொள்ளவும் முடியும். ஆகவே ஒரு காணியில் உள்ளவரை வெளியேற்றுவது

தொடர்பான தீர்மானத்தை எடுப்பவர் மேற்படி தகுதி வாய்ந்த அதிகாரியே என்பதை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். ஒருவரை காணியில் இருந்து வெளியேற்ற நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்பவர் பிரதம தகுதி வாய்ந்த அதிகாரியா? அல்லது அவரால் கையளிக்கப்பட்ட அதிகாரம் கொண்ட தகுதி வாய்ந்த அதிகாரியா? என்பது காணியை மீளப்பெறும் சட்டத்தின் கீழ் முக்கியம் வாய்ந்ததாக இருக்கிறது. ஆகவே காணியில் இருந்து வெளியேறுமாறு கேட்டு அறிவித்தல் கிடைத்தலும் முதலில் கவனிக்க வேண்டியது அறிவித்தலை தந்தவரின் அதிகாரம் பற்றியது ஆகும். அவரது தகுதி வாய்ந்த அதிகாரி என்ற நிலைமை ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதா என்றாகும். இது சட்டத்துடன் தொடர்புபட்டது.

சிலவேளைகளில் நீதிமன்றங்களில் வழக்கை தாக்கல் செய்யும் போது இதனை சட்டத்தரணிகள் கவனிப்பதில்லை. இறுதி நேரத்தில் மேன் முறையீட்டிலேயே இதனை கண்டுபிடித்து வெற்றி பெறுகின்றனர். இதனால் பணச் செலவும் கால விரயமும் ஏற்படுகிறது. ஆகவே முதலில் கவனிக்க வேண்டியது தன்னை வெளியேறுமாறு கூறியவரின் அதிகாரம் சட்டப்படி செல்லுமா? என்பதேயாகும்.

வழக்குகள்

பின்வரும் இரண்டு வழக்குகள் இதற்கு நல்ல உதாரணங்களாகும்.

I. **அல்விஸ் எதிர்வெதமுல்ல மேலதிக பணிப்பாளர் நாயகம் தேசிய வீடமைப்பு அதிகார சபை**(1997)3 SLR 417

இந்த வழக்கில் மேலதிக பணிப்பாளர் நாயகம் தமது அதிகார சபையில் உள்ள காணியிலிருந்து ஒருவரை வெளியேற்றும் கட்டளையை வழங்குமாறு நீதிமன்றத்தைக் கோரியிருந்தார். நீதியரசர் எவ்.என்.டி. ஜெயசூரிய தேசிய வீடமைப்பு அதிகார சபை சட்டத்தின்படி தேசிய வீடமைப்பு அதிகார சபையின் பணிப்பாளர் நாயகமே வழக்கை தாக்கல் செய்ய வேண்டும். இங்கு வழக்கைத் தாக்கல் செய்தவர் மேலதிக பணிப்பாளர் நாயகமாகும். இவருக்கு அதிகாரம் கையளிக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை. ஆகவே இவரால் கேட்கப்பட்ட நிவாரணம் வழக்கப்பட முடியாது என தீர்த்தார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபை இந்த தீர்ப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்தது. உயர் நீதிமன்றம் கூறியது என்னவெனில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் பணிப்பாளர் சபை அதிகாரத்தை வழங்கலாம் என்றாகும். ஆகவே உரிய அதிகாரம் பெறாத இடத்தில் நியமிக்கப்படும் தகுதிவாய்ந்த அதிகாரியை நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தலாம்.

II. பண்டா எதிர் தலைவர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் மெதிரிகிரிய (2003) ISLLR 1993

இந்த வழக்கில் மெதிரிகிரிய பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் காணியில் ஒருவர் சட்டவிரோதமாக குடியேறியிருந்தார். இவரை வெளியேற்றுவதற்கு நீதிமன்று நடவடிக்கை எடுக்க வழக்கை தாக்கல் செய்யும் அதிகாரத்தை பிரதேச செயலாளர்(Divisional Secretary) பலநோக்கு கூட்டுறவு சங்கத் தலைவருக்கு வழங்கி அவரை தகுதிவாய்ந்த அதிகாரியாக நியமித்தார். அவர் வழக்கை தொடர்ந்த போது நீதிமன்றம் அந்த வழக்கை தள்ளுபடி செய்தது.

மேன்முறையீடு செய்யப்பட்டது. மேன்முறையீட்டு நீதிமன்றம் பின்வருமாறு தீர்த்தது.

“அரசாங்க அதிபர் தனது அதிகாரத்தை பிரதேச செயலாளருக்கு அளித்தது தவறு இல்லை. பிரதேச செயலாளர் பகிரங்க ஊழியராவார் (Public Officer). பிரதேச செயலாளர் தனது அதிகாரத்தை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவருக்கு அளித்தது தவறு. ஏனெனில் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தலைவர் ஒரு பகிரங்க ஊழியர் அல்ல. பிரதேச செயலாளர் தனது அதிகாரத்தை இன்னுமொரு அரச ஊழியரிடமே கொடுக்கலாம். பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு கொடுக்க முடியாது. ஆகவே அந்த தகுதி வாய்ந்த அதிகாரி நியமன சட்டத்தின் முன்னர் செல்லாது (Bad in Law)என்றது.

இந்த சின்ன ஒரு விடயத்தை விளங்கிக் கொள்ளாமல் வழக்கை தாக்கல் செய்தவர்களைப் போல் பலர் இன்றும் இருக்கின்றனர். ஆகவே காணியில் உள்ள ஒருவரை வெளியேற்றும் அறிவித்தல் கிடைத்ததும் முதலில் சட்டத்தரணிக்கு ஆலோசனை கூறவேண்டியது அறிவித்தலை அனுப்பியவரின் சட்ட நிலைமையை பார்வையிடுமாறு கேட்டு ஆகும்.

சட்டத்தரணி எல்லாவற்றையும் கவனிப்பார் என்று இருந்து விடக் கூடாது. யானைக்கும் அடி சறுக்கும்.

ஆகவே அரச காணியை மீளப்பெறும் விடயத்தில் முதலில் கவனிக்க வேண்டியது அறிவித்தல் கொடுத்தவர் சட்டப்படியாக தகுதிவாய்ந்த அதிகாரியா? என்றேயாகும். அவர் தகுதிவாய்ந்த அதிகாரியாக இருந்தால் அதற்கு பின்னர் ஒன்றுமே செய்ய முடியாது. காணியை விட்டு வெளியேற வேண்டும். ஆயின்

இரக்கமணு கொடுத்து வெளியேற வேண்டிய காலத்தை பிற்போட முயற்சித்து அதனைப் பெற்றுக் கொண்டு பின்னர் வெளியேறுவதே நன்று. காலத்தை கடத்த வேண்டுமானால் மேன் முறையீடு செய்யலாம். இச்சட்டத்தின் கீழ் தகுதிவாய்ந்த அதிகாரியின் கோரிக்கையை தோற்கடிப்பது கஷ்டம்.

மீளப் பெறும் சட்டத்தின் கீழ் ஒருவர் காணியை கொடுக்காமல் இருக்க வழி இல்லையா?

அரச காணியை மீளப் பெறும் சட்டத்தின் கீழ் காணியை அரசுக்கு வழங்காமல் தொடர்ந்தும் இருக்க வழியில்லையா? என்று பலர் அங்கலாய்ப்பது உண்டு. சில வழக்குகளில் இது பற்றி நீண்ட விவாதம் நடைபெற்றதும் உண்டு. ஆனாலும் தீர்க்கப்பட்ட வழக்குகளில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை பார்க்கும் போது 1979 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க சட்டத்தின் நோக்கம் என்னவெனில் அரச காணிகளை ஒருவருக்கு பாவிப்பதற்கு வழங்கியதன் நோக்கம் அக்காணிகளை உரிமையாக்கிக் கொள்ளலாம் என்ற எண்ணத்தை கொள்ளக்கூடாது என்றாகும். இதனாலேயே அவருடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளப்படுகிறது. அந்த ஒப்பந்தத்தில் மிகத் தெளிவாக கூறப்பட்டுள்ளது என்னவெனில், அரசு கேட்டும்போது அக்காணியினை திருப்பியளிக்க வேண்டும் என்ற நிபந்தனையாகும். Land had been to a person on a contractual basis and where there was an obligation to handover back the propertyஎன்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டால் உடனடியாக எந்த நிபந்தனையுமின்றி காணியை கையளிக்க வேண்டும்.

மேற்படி மீளப்பெறும் சட்டத்தின் கீழ் வெற்றி பெற முடியாவிட்டாலும் நீதிமன்றத்தில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் சில உள. அவை எவை என பார்ப்போம்.

1) மேற்படி சட்டத்தின் கீழ் பிரத்தியேக காணி ஒன்றுக்கு(Private Land) எதிராக தகுதிவாய்ந்த அதிகாரி நடவடிக்கை எடுக்க முடியாது.

ஆகவே தான் குடியிருக்கும் காணி அரசகாணி அல்ல என்றும் தனிப்பட்ட காணி என்றும் நீதிமன்றத்தில் வாதாடலாம். ஆவணங்கள் இருப்பின் அவற்றை சமர்ப்பித்து வாதாடலாம்.

2) தனது காணியை மீளப் பெற எடுக்கும் நடவடிக்கையானது இயற்கை நீதிக்கு புறம்பானது என்றும் தகுதி வாய்ந்த அதிகாரிக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு புறம்பாக அவர் செயல்பட்டுள்ளார் என்றும் கூறி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தகுதி வாய்ந்த அதிகாரியால் அனுப்பப்பட்ட அறிவித்தலை அழிக்குமாறுகோரி உறுதிகோள் ஆணையை கேட்கலாம். ஏனெனில் தகுதிவாய்ந்த அதிகாரி தன்னிச்சையாக நடக்க சட்டம் இடமளிக்கவில்லை என்றும் ஆகவே அவரது நடவடிக்கை வரம்பு இகழ்ந்தது (Ultravires) என்றும் கூறி வழக்காடலாம். இதுவே சற்று ஆறுதல் அளிக்கும் நிவாரணமாக அமையும்.

3) இந்த முறைகளில் வழக்காடி வெற்றி பெற முயற்சிக்கலாம். வெற்றி கிடைப்பது கஷ்டமாக இருப்பினும் அதனை முயற்சித்து பார்க்கலாம். சிலவேளை வென்றும் விடலாம்.

4) தகுதி வாய்ந்த அதிகாரி சமர்ப்பித்த ஆவணங்கள் விசேடமாக சத்திய கடதாசி (Affidavit) சில வேளைகளில் Oath and Affirmation Act.இன் 12 பிரிவுக்கு முரணாக இருக்கலாம். ஆகவே அவற்றை சுட்டிக்காட்டி வழக்கை தள்ளுபடி செய்யலாம்.

ஏனெனில் கந்தையா எதிர் அபயகோன் வழக்கில் நீதியரசர் குணவர்த்தன கூறியது என்னவெனில் தகுதி வாய்ந்த அதிகாரியின் சத்திய உரை பல குறைபாடுகளைக் கொண்டது. அவர் Oaths Affirmation Actஐ சரியாக புரிந்து கொள்ளவில்லை. இதனால் அவர் தவறு செய்துள்ளார். அரசின் காணியை மீளப்பெறும் சட்டமானது மிகக் கவனமாக கையாளப்பட வேண்டிய சட்ட விதிகளைக் கொண்டதாகும். அது மனித உரிமையை பாதிக்கக்கூடியது. ஆகவே அச்சட்டத்தின் பிரிவுகளை மிகக் கவனமாக பாவிக்க வேண்டும். ஆனால் அது பிழையாக பாவிக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

மேலே கூறிய சில வழிகளில் தகுதிவாய்ந்த அதிகாரியின் நடவடிக்கைகளை எதிர்த்து நீதிமன்றம் செல்லலாம்.

நீதிமன்றம் செல்லும் முன்னர் காணியில் குடியிருப்பவர் தனது பக்கத்தில் நியாயம் இருக்கிறது என்பதில் திடமாக இருக்க வேண்டும். ஏனெனில் அவர் மீது நீதிமன்றம் அனுதாபம் கொள்ள மேற்படி சட்டத்தில் எந்த பிரிவும் இல்லை. ஆகவே நீதிமன்றத்தால் ஒன்றும் செய்ய முடியாது.

சமீபத்தில் நடந்த தாதியர் வேலை நிறுத்தத்தின் போது அவர்கள் தங்குமிடத்தை அரசு பெற எடுத்த முயற்சியை முறியடிக்க தாதியர் சங்கம் முயற்சித்த

போது அது தோல்வியில் முடிந்தது நாம் அறிந்ததே. ஆகவே அரசகாணியை மீளப்பெறும் சட்டத்தில் பாதுகாப்பை எடுப்பது கஷ்டம். கவனமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதில் உள்ள சாதாரண விடயம் என்னவெனில் ஒப்பந்தத்தின் கீழ் காணியை பெறும் ஒருவர் பின்னர் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டதும் அவரது உரிமைகளை இழந்து விடுகிறார். உயிரற்ற உடலைக் கொண்டவராகவே விளங்குகிறார். இந்நிலையில் அவர் வெற்றி பெறலாமா? என்பதை பல முறை சிந்தித்து செயலாற்ற வேண்டும். சிலாபத்து வாடி வீட்டு தீர்ப்பை வாசிக்கவும். இதில் வாடி வீட்டு காப்பாளருடன் செய்த ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டதால் அவர் அத்துமீறியே அங்கு இருக்கின்றார் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்த்தது.

தொகுப்புரை

அரச காணியை மீளப்பெறும் சட்டம் இன்றைய வடிவை அடைவதற்கு அரசியல் கட்சிகளின் போட்டிகளும் ஒரு காரணமாக அமைந்தது. இலங்கையானது அரசியல் செல்வாக்கு நிறைந்த அரசுக்களை கொண்ட நாடாகும். இதனால் கட்சிகளிடையே போட்டாபோட்டியும் எதிர்க்கட்சி அங்கத்தவர்களையும் ஆதரவாளர்களையும் பயமுறுத்தும் நடவடிக்கைகளும் பரந்தளவில் காணப்படும் ஒரு நாடாகும்.

இதன் தாக்கத்தை அரச காணிகளை மீளப்பெறும் சட்டத்தில் நாம் காணலாம். பல நூற்றாண்டு காலமாக குடியிருந்தவர்களை அக்குடியிருப்பு இடங்களில் இருந்து வெளியேற்ற அதிகாரிகளுக்கு அனுமதி கொடுக்கும்

போது அதனை பரிசீலிக்க நீதிமன்றங்களுக்கு அனுமதியில்லாத ஒரு நிலைமை இச்சட்டத்தில் காணப்படுகிறது.

நீதியரசர் குணவர்த்தன கூறியுள்ளது போல் வாழும் உரிமையை திடீரென இழக்கும் ஒருவரின் நிலையை அலசி ஆராய இச்சட்டம் இடமளிப்பதில்லை. ஆகவே இச்சட்டத்தை இறுக்கமாகவே கையாள வேண்டியிருக்கிறது. இதனால் பலர் பாதிக்கப்பட்டாலும் அது சட்டத்திற்கு முரணாக இல்லாததால் ஒன்றுமே செய்ய முடியாத நிலை இருக்கிறது என்ற கருத்துப்பட கூறியது இங்கு கவனிக்கத்தக்கது. ஆகவே தொடர்ந்தும் காணியில் குடியிருக்க விரும்புபவர் தன்னிடம் Permitஉள்ளது என்று அல்லது எழுத்திலான அரசு அதிகாரம் உள்ளது என்று காட்ட வேண்டும். இவற்றின் வெளியேற்றல் கூட்டாக வழங்கப்படும்.

இச்சட்டத்தின் பிரிவுகள் மிக இலகுவாக குடியிருக்கும் ஒருவரை வெளியேற்ற உதவுவதால் இதனை மீள்பரிசீலனை செய்ய வேண்டும். ஆனால் அதே நேரம் குடியிருப்பவர்களும் தாங்கள் குடியிருக்கும் பகுதிகள் அபிவிருத்திக்குத் தேவையான பகுதிகள் என்பதை கவனத்தில் எடுக்காமல் மாடிக் கட்டிடங்களையும் வேறு அபிவிருத்திகளையும் அரசியல் செல்வாக்கால் செய்து கொள்கின்றனர். ஆகவே தான் இச்சட்டம் இறுக்கமாக கொள்ளப்படுகிறது. இக்காணிகளில் உள்ளவர்கள் ஒன்றை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். கயிற்றில் நடப்பவர்கள் நிலையிலேயே அவர்கள் காணியில் வாழ்கின்றனர் என்றாகும்.

இச்சட்டம் பற்றி இன்னும் பலவற்றை வாசகர்கள் அறிய வேண்டும். அது பின்னர் எழுதப்படும்.

காணியுடன் தொடர்புடைய சில பிரச்சினைகளும் அவை தீர்க்கப்படும் முறையும்.

பெரும்பாலானவர்கள் கருதும் ஒரு விடயம் என்னவெனில் சட்டம் என்பது ஒரு சிக்கலான விடயம் என்றாகும்.இதற்கு காரணங்கள் இல்லாமல் இல்லை. சட்டம் சம்மந்தமான விடயங்களில் மிகச் சிக்கலான விடயம் காணி சம்மந்தமானதாகும். இதனை தர்க்கிக்காமலே ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆகவே அத்தகைய விடயமான காணியை பற்றி பல்வேறு நூல்கள் உள்ளன. அவற்றையெல்லாம் படிக்க எல்லோருக்கும் அவகாசம் இல்லை. சில சில முக்கிய விடயங்களை மட்டுமே அறிந்து வைத்துக்கொள்கின்றார்கள். உதாரணமாக பிரிவிடல் பிரகடனம் உரித்து நிறுவல்,ஈடு, குத்தகை சேவகர்கள் வாடகை போன்றவையே பலராலும் அறியப்பட்டுள்ளது. இவை சாதாரண மக்களால் மட்டுமல்ல சட்டம் தெரிந்தவர்களும் இவற்றையே அறிந்து வைத்துள்ளனர். ஏனெனில்காணியை பற்றிய சட்டம் கடல் போன்றது. அத்துடன் காணி சம்பந்தமாக நீதிமன்றங்கள் அளித்த தீர்ப்புக்கள் நூல்களை விட விசாலமானவை. ஆகவே இவற்றையெல்லாம் சாதாரணமாக படிக்க இயலாது. இதனால்தான் இயன்றளவு நடைமுறையில் ஏற்படும் பிரச்சினைகளையும் அவற்றை தீர்க்கும் உபாயங்களையும் பற்றியும் பலர் எழுதுகின்றனர். இந்த வகையில் இன்று நீங்கள் அறியப்போவது பின்வருவனபற்றியாகும்.

1. போட்டிபோடும் உறுதிகளில் எந்த உறுதி சட்ட வலு கொண்டது?

2. கடன்கொடுத்தவரை ஏமாற்ற காணியை இன்னுமொருவர் பெயருக்கு மாற்றினால் அதனை பெறும் முறை என்ன?
3. காணியை அபிவிருத்தி செய்தோம் என்று கூறி நஷ்டஈடு பெறுதல் பற்றிய விடயம்.

போட்டிபோடும் உறுதிகளில் எந்த உறுதி சட்ட வலுக் கொண்டது?

காணி ஒன்றை வாங்குபவர் அந்த உறுதியை காணிக் கந்தோரில் பதிய வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.அதேபோல் அந்த உறுதியை பதியாவிட்டால் அது செல்லாது என்று கூறவும் முடியாது.

அப்படியானால் ஏன் அந்த உறுதியை காணிக் கந்தோரில் பதிவு செய்கிறோம் என்ற வினா எழுவது இயற்கையேயாகும். அதற்கு காரணம் என்னவெனில் ஒரு காணிக்கு இரண்டு உறுதிகள் இருந்தால் அதில் எந்த உறுதிக்கு முன்னுரிமையுண்டு என நீதிமன்றங்கள் தீர்க்க இப்பதிவுதான் சாட்சியமாக அமைகிறது. அந்த உறுதியே சட்டத்தின் முன் செல்லுபடியாகும். அதனை இன்னும் தெளிவாகக் கூறுவதானால் காணிக்கு இரண்டு உறுதிகள் இருக்கும் போது அவற்றில் முதல் பதிந்த உறுதியானது அதன் பின்னர் பதிந்த உறுதியுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது முன்னர் பதிந்த உறுதியையே முன்னுரிமை பெற்ற உறுதியாக நீதிமன்றம் ஏற்கும். ஆகவே தான் பதிவு அவசியமாகிறது. இதில் முக்கியமாக கவனிக்க வேண்டிய விடயம் என்னவெனில் பின்வருவனவாகும்.

அ) உறுதிகள் இரண்டும் பெறுமதிமிக்க மதிபலனுக்கு பெற்ற உறுதிகளாக அவை இருக்க வேண்டும்.

ஆ) உரிய இதழில் பதியப்பட்டிருக்க வேண்டும்.

இ) எதிர்உரித்துக் கொண்டவையாக இருக்க வேண்டும்.

மேற்படி அம்சங்களைக் கொண்ட இரண்டு உறுதிகளில் முதன் முதலாக காணிக் கந்தோரில் பதிவு செய்யப்பட்ட உறுதி முன்னுரிமை கொண்ட உறுதியாக விளங்கும்.

இவ்விடயத்தில் இன்னுமொரு வினா எழுவதை நீங்கள் காணலாம். அது என்னவெனில் முன்னுரிமைப் பிரச்சினை எழுவது இரண்டு உறுதிகள் ஒரு காணிக்கு இருக்கும் போதேயாகும். அது எப்படி ஏற்படும் ? சாதாரணமாக ஒரு காணிக்கு இரண்டு உறுதிகள் எப்படி இருக்கும் என்று சாதாரணமாக மக்கள் கேட்பது உண்டு. இவ்விடயம் பண்டா எதிர் அலித்தம்பி (15NLR177) என்ற வழக்கில் ஆராயப்பட்டது. இவ்வழக்கில் ஆராயப்பட்ட விடயம் ஒரு காணியை இரண்டு முறை விற்பது எப்படி என்றாகும். இவ்வழக்கில் தீர்க்கப்பட்டது என்னவெனில் அவ்வாறு விற்பதும் உறுதி எழுதுவதும் சட்டவிரோதம் என்றாலும் பல உறுதிகள் அத்தகைய குணாம்சங்கள் கொண்ட உறுதிகள் நாட்டின் பல பகுதிகளிலும் நடமாடுகின்றன என அவதானிக்கப்பட்டது. சில பகுதிகள் ஒரு உறுதியை நல்ல உறுதி என்றும் மற்றைய உறுதியை ஜப்பான் உறுதி எனவும் சிலர் அழைப்பதையும் நாம் காணலாம்.

சில வேளைகளில் ஜப்பான் உறுதி அசல் உறுதியை முந்திவிடுவது உண்டு. இதற்கு ஒரு உதாரணம் ஜேம்ஸ் எதிர் கரோலிஸ் வழக்கில் காட்டப்பட்டது.

(17NLR 76)

இந்த வழக்கில் x என்பவர் தனது காணியை y என்பவருக்கு விற்றார்.x இறந்ததும் x வழியுரிமையாளரான z அந்தக் காணியைA என்பவருக்கு விற்றார். ஆனால் Y அந்த உறுதியை உரிய முறைப்படி காணிக்கந்தோரில் பதியவில்லை. உண்மையில் z அந்த காணியை A என்பவருக்கு விற்பதற்கு முன்பே x என்பவர் அக்காணியை Y க்கு விற்று இருந்தார். ஆயினும் நீதிமன்றம் பின்வருமாறு கூறியது.

மேற்படி காணி x இன் வழியில் வந்தது. ஆகவே Y யின் உறுதியும் A யின் உறுதியும் எதிர் உரித்துக் கொண்டவையாக விளங்குகின்றன. A பெறுமதியான மதிபலனுக்கே காணியைப் பெற்றார் என்றும் Y யின் உறுதிமுறைப்படி பதிவு செய்யப்படவில்லை என்றும் Aயின் உறுதி முறைப்படி உரிய இதழில் பதிவு செய்யப்பட்ட படியால் காணி Aக்கு சொந்தம் என்றது. ஆகவே காணியை வாங்குபவர்கள்கவனமாக இருக்க வேண்டும்.

கடன் கொடுத்தவரை ஏமாற்ற காணியை இன்னுமொருவர் பெயருக்கு மாற்றுதல் பற்றியது.

சாதாரணமாக கடன்பெற்ற ஒருவரிடம் இருந்து கடனை அறவிட முடியாத போது கடன் கொடுத்தவர் கடனாளிக்கு எதிராக ஒரு வழக்கை தாக்கல் செய்து நீதிமன்றத்தில் ஒரு தீர்வைப் பெறலாம். பின்னர் கடனாளியிடம் காணி நிலங்கள் இருப்பின் அவற்றை கைப்பற்ற நீதிமன்றத்திடம் அனுமதியையும் பெறலாம்.

கடனை பெறும் சிலர் பலரை ஏமாற்றி பழக்கப்பட்டவர்களாக இருப்பது வழக்கம். அவர்கள் கடனை பெறும் போது தங்களிடம் இருக்கும் காணியை காட்டி கடன் பெறுவது உண்டு. பின்னர் கடனை பெற்றவர் தனது காணியை இன்னுமொருவர் பெயருக்கு மாற்றிவிடுவதும் உண்டு. இத்தகைய சந்தர்ப்பத்தில் நீதிமன்றம் கடன் பெற்றவரின் காணியை கைப்பற்ற தீர்ப்பு அளித்தாலும் காணி அவரிடம் இல்லாததால் காணியை கைப்பற்றுவது சங்கடமாயிருக்கும். இந்நிலையில் என்னசெய்யலாம்.?

உரோம - டச்சு சட்டத்தின் கீழ் (ACT 10 Pauliana) போலியன் வழக்கு என்ற ஒன்று உண்டு. இவ்வழக்கை தாக்கல் செய்து மேலே கூறியவாறு காணி மாற்றத்தை இரத்துச் செய்யலாம். இந்த வழக்கில் கடன் கொடுத்தவர் வழக்காளியாக இருக்க வேண்டும். காணியை மாற்றியவரும் காணியை மாற்றி பெற்றவரும் எதிரிகளாக இருக்க வேண்டும்.

போலியன் வழக்கை தாக்கல் செய்ய பின்வரும் சூழ்நிலை இருக்க வேண்டும்.

1. காணியை விற்பனை செய்வது நல்லெண்ணத்துடன் அல்லாமல் ஒருவரை வஞ்சனை செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் ஆனது என நிரூபிக்கப்பட வேண்டும்.
2. இந்த விற்பனைக்கு பிறகு கடனாளியிடம் நீமன்றத் தீர்ப்பின்படி கடனை அடைக்கக் கூடிய அளவுக்கு வேறு காணிகள் இல்லை என்பது நிரூபிக்கப்படல் வேண்டும்.

3. மேற்படி காணி மாற்றத்தால் தனது கடனை அறவிடும் உரிமை பாதிக்கப்பட்டுள்ளது என்பதை நிரூபிக்கப்பட வேண்டும்.
   மேலே கூறிய காரணங்களை நிரூபிக்க முடியுமானால் வழக்கில் வெற்றி பெற்றுக் கொள்ளலாம். இல்லையேல் வெற்றி பெறமுடியாது.

அத்துகோறளை எதிர் அத்துக்கோறனை

வழக்கில் (71 NLR 369)தீர்த்ததன் படி போலியன் வழக்கிற்கான வழக்கெழு காரணம் எழுவது வழக்காளி கடன் பணத்தைப் பெறுநராக மாறும்பொழுது தான். அதாவது வழக்கின் விசாரணையின் பின்னர் தீர்ப்பு வழங்கும் திகதியில் இருந்துதான் போலியன் வழக்கு வஞ்சனையாக சொத்து மாற்றப்பட்டது என்று நிரூபிக்கப்பட்டு தீர்ப்பு பெறும் போதுதான் வழக்கு நடைபெறும்போது போலியன் வழக்கைத் தாக்கல் செய்யமுடியாது. ஏனெனில் கடன் கொடுத்தவர் கடன் பெற உரித்துடையவர் என்ற தீர்ப்பு அப்போது அளிக்கப்படவில்லையாதலால்.ஆயினும் சில்வா எதிர் மக் (1 NLR 31) வழக்கில் எதிர்காலத்தில் கடன் பெற்றவர் தீர்ப்பை பெற இடமுண்டு என்று கண்டால் அவரும் போலியன் வழக்கை தாக்கல் செய்யலாம் என்று கூறப்பட்ட போதும் அது சம்மந்தமாக முடிவு இல்லை.

சிவில் நடவடிக்கை முறைச்சட்டத்தின் 247 ஆம் பிரிவின் கீழ் சிவில் வழக்கு ஒன்றின் தீர்ப்பு பெற்ற ஒருவர் தீர்ப்பு பெற்று 14 நாட்களுக்கு இடையில் அந்த கடன் பணத்தை பெறுவதற்கு வழக்கு ஒன்றை எதிராளிக்கு எதிராக தாக்கல் செய்யலாம். இந்த வழக்குக்கும்

போலியன் வழக்கிற்கும் இடையில் உள்ள வேறுபாட்டை முத்தார் எதிர் இஸ்மயில் வழக்கில்(64 NLR 293இல்) நீதியரசர் பஸ்நாயக்க அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்.

1. சிவில் நடவடிக்கை முறைச்சட்டத்தின் 247 ஆம் பிரிவின் கீழ் விற்பனை உறுதி ஒன்றைரத்துச் செய்யும் உறுதி ஒன்றை இரத்துச் செய்ய நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை.
2. ஆயின் போலியன் வழக்கில் விற்பனை உறுதியை இரத்துச் செய்ய நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.
3. ஆகவே சிவில் நடவடிக்கை முறைச் சட்டத்தின் 247 ஆம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்படும் வழக்கும் போலியன் வழக்கும் சமமானதில்லை என்றாகும்.

குணவர்த்தன எதிர் பிலிந்தஹாமி (1 CWR 95)

நீதியரசன் டீ சம்போயா அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்

மோசடியாக மாற்றப்பட்ட உறுதியை இரத்துச் செய்ய நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை. ஆனால் போலியன் வழக்கின் கீழ் உள்ள வசதியை வெறிதாக்க (VOID) மட்டும் நீதிமன்றதத்திற்கு அதிகாரம் உண்டு என்றும் உறுதி வெறித்தாக்கியதும் அந்த காணி விற்பனைக்கு ஏற்புடையதாகிறது என்றும் கூறியுள்ளார்.

Bala Etana vs Dassi therun nanse (1896/2)

(Brown Reports 355) இந்த வழக்கில் தீக்கப்பட்டது. என்னவெனில் உறுதி மாற்றத்தின் போது பணப் பரிமாற்றல் (Consideration) நடை பெறவில்லை என்பது நிரூபிக்கப்பட்டால் அந்த மாற்றம் கடன்காரரை ஏமாற்றவே நடைபெற்றது என்ற அம்சம் நிரூபிக்கப்பட்டு விட்டது. என்று கொள்ள வேண்டும் என்றாகும்.

மீராசாஹிபு எதிர் அயன் சின்னவன்(29 NLR 84) வழக்கில் நீதியரசர் கார்வின் பின்வருமாறு கூறியுள்ளார். பெறுமதியான மதிபலன் (Consideration) வழங்கப்பட்டது. என்று காட்டுவதன் மூலம் மேற்படி மோசடி உறுதி மாற்றத்தில் தான் சம்மந்தப்படவில்லை என்பதை ஏற்கமுடியாது என்று கூறியுள்ளார்.

ஆகவே மேலே ஆராயப்பட்ட வழக்குகளின் தீர்ப்பில் இருந்து நாம் அறிவது என்னவெனில் போலியன் வழக்கு கடன் கொடுத்தவரை ஏமாற்ற செய்யப்படும் நடவடிக்கை தொடர்பானது என்பதாகும்.

The most important element is that of a fraudulent intention to defeat the claim of creditors என்பதாகும்

காணியை அபிவிருத்தி செய்தோம் என்று கூறி நஷ்டஈடு பெறுதல்

ஒருவர்காணி தனது என்ற எண்ணத்துடன் அக்காணியில் சில அபிவிருத்தி வேலைகளை செய்ததன் பின்னர் அக்காணி வேறு ஒருவர் உடையது என கண்டால்

அவர் என்ன செய்யலாம்? நீதிமன்றம் எப்படியான தீர்ப்பை வழங்கலாம் என்பதை பற்றி பார்ப்போம்.

நீதிமன்றம் பார்ப்பது என்னவெனில் அபிவிருத்தி செய்த விடயம் நிலத்துடன் இணைந்ததாகவும் பிரிக்கமுடியாததாகவும் இருக்கின்றதா என்றாகும். நிலத்தில் இருந்து அபிவருத்தி செய்ததை பிரிக்க முடியாது எனக் கண்டால் சொந்தக்காரர் அபிவிருத்தி செய்தவருக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும்.

திசேரா எதிர் திசேரா (1940-42 NLR60)ஆம் வழக்கில் கூறப்பட்டது என்னவெனில் தும்பு ஆலையொன்றில் இயந்திரங்கள் நிலத்தின் பொருத்துவதற்கு சீமெந்து சாந்து பூசப்பட்ட இடத்தில் அது பொருத்தப்பட்டதால் இயந்திரமானது நிலத்துடன் இணைந்துள்ளது என்றும் எனவே காணி உரித்தாளர் இழப்பீடு செலுத்த வேண்டும் எனத் தீர்க்கப்பட்டது.

இவ்வாறு இழப்பீடு வழங்குவதற்கு முன்னர் அபிவிருத்தியை செய்தவரின் எண்ணத்தை நீதிமன்றம் பரிசீலிக்கும் Ut dominusPossession என அழைக்கப்படுகின்ற நானே உரித்தாளர் என்ற எண்ணம் உள்ள ஒருவர் அபிவிருத்தி செய்திருந்தால் அவருக்கு இழப்பீடு வழங்க வேண்டும். சில வேளைகளில் வாடகை குடியிருப்பாளர் சட்டபூர்வமானவர்களாக அக் காணியில் இருந்து அபிவிருத்தியை செய்தால் அவருக்கு இழப்பீடு கேட்கலாம்.

ஆனால் MalafidePossessor ஒருவருக்கு இழப்பீடு கிடைப்பது மிகக் கஷ்டம்.

இவ்வாறு ஒருவருக்கு இழப்பீடு கொடுப்பதற்கு ரோம-டச்சுச் சட்டத்தின் கீழ் உள்ள Unjust Enrichment

என்ற சட்டக் கொள்கை காரணமாகும். இக் கொள்கையின் தாற்பரியம் என்னவெனில் பிறர் உழைப்பில் இலாபம் ஈட்டக் கூடாது என்பதாகும். அபிவிருத்தியால் அந்த காணியின் பெறுமதி கூடுவதால் காணிச் சொந்தக்காரன் மட்டும் நன்மைபெறக் கூடாது என்றும் அபிவிருத்தி செய்தவருக்கும் உரிமையுண்டு என்பதாகும்.

செய்யப்பட்ட அபிவிருத்தியானது தீய எண்ணத்துடன் Malafide intention செய்யப்பட்டு இருந்தபோதும் அந்த அபிவிருத்தியானது காணிக்கு அவசியமானது எனக்கண்டால் வழக்காளிக்கு நீதிமன்றம் இழப்பீட்டை கொடுப்பதற்கு பின்நிற்பதில்லை.

யசஹாமி எதிர் பொடிஹாமி(1943/44)NLR 385 இல் கூறப்பட்டது என்னவெனில், அபிவிருத்தி நடைபெறுவது காணியுரிமையாளருக்கு தெரிந்திருந்தும் அவர் அதைத் தடுக்காமல் இருந்தால் இழப்பீடு பெற வழக்காளிக்கு உரிமையுண்டு என்றாகும்.

இழப்பீடு கேட்பது சம்மந்தமான இன்னுமொரு விடயம் என்னவெனில் ஒருவருடைய காணியானது அவரிடம் இருந்து பறிபோகப்போகிற சமயம் அதனைத் தடுத்து நிறுத்த உதவி செய்தவர் இழப்பீடு கேட்கலா**ம்** என்பதாகும்.

தளுவத்தை எதிர் சேனநாயக்க (67 NLR52) வழக்கில் இது கூறப்பட்டுள்ளது. இந்த வழக்கில் காணிச் சொந்தக்காரன் உரிய காலத்தில் உள்ளூராட்சி சபைகளில் வரியை செலுத்தாததல் அக்காணியை விற்பதை உள்ளூராட்சி மன்றம் தடை செய்து தான் ஏலத்தில் அதனை விற்க தீர்மானித்தது. அத்தகைய சந்தர்ப்பத்தில் அயலவர் ஒருவர்

உள்ளூராட்சி சபைக்கு செலுத்தவேண்டிய வரியையும் தண்டப் பணத்தையும் செலுத்தி ஏல விற்பனையில்அக்காணியை உள்ளூராட்சி மன்றம் விற்பதை தடை செய்தார்.

பின்னர் நடைபெற்ற வழக்கில் அவ்வாறு பணத்தைச் செலுத்தியவர் அக்காணியின்அபிவிருத்திக்கு உதவியவராகிறார் என்று கூறி அவருக்கு இழப்பீடுவழங்க வேண்டுமென்று நீதிமன்றம் தீர்த்தது.

சில வழக்குகளில் பிராதில் ஒரு வழக்குரையை காணலாம். எதிராளிக்கு எதிராக உடைமை சம்மந்தமாக நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும் பட்சத்தில் தான் செய்த அபிவிருத்திக்கு பணம் வழங்க வேண்டும் என்றும் அவ்விழப்பீடு வழங்கும் வரையும் அக்காணியை தான் வைத்திருக்க கட்டளையிடப்பட வேண்டும் என்றாகும்.இதுVOET அவர்களின் சட்டக் கொள்கையாகும்.

இக் கொள்கையின் கீழ் காணி உரித்தாளர் இழப்பீடு வழங்காவிட்டால் தான் அபிவிருத்தி செய்தவற்றை கழற்றிக் கொண்டு செல்வதற்கு இடம் தரவேண்டும் என்றாகும். இது அவருக்கு வழங்கப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட (Option)உரிமையாகும்.நன்நோக்கு உள்ளவர்களுக்கு மட்டுமே இது பொருந்தும்.

தீய நோக்குடன் உடைமையில் இருப்பவருக்கு இது பொருந்தாது என உரோம எழுத்தாளர் வூட்(VOET) கூறியுள்ளார். இவரது கூற்றுப்படி எப்படிப்பட்ட அபிவிருத்தியானாலும் அவருக்கு அது உரிமையில்லை என்றும் அவர் அந்த அபிவிருத்தியை உரிமையாளருக்கு கையளித்துவிட்டுச் செல்ல வேண்டும் என்றே நீதிமன்றங்கள் கூறியுள்ளன.

ஆகவே அபிவிருத்திக்கான இழப்பீட்டை நன் நோக்குள்ளவர் பெற உரிமையுண்டு. அதனை கொடுக்கும்வரை ஆட்சியுரிமை அவர் பக்கம் இருக்கும். ஆகவே நன்நோக்குடன் இருப்பவர் அக்காணியை அபிவிருத்தி செய்தால் இழப்பீட்டை வழங்குவதே நல்லது.

தீய நோக்குடன் காணியில் இருப்பவருக்கு மேற்படி உரிமையில்லை. ஆனால் தீய நோக்குடையவர் காணியை அபிவிருத்தி செய்கிறார் என்று கண்டால் அதனை உடன் உரித்தாளர் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டும். தவறின் தீய நோக்குடையவருக்கும் காலவரம்பு சட்டம் (ஆட்சியுரிமை) வேலை செய்ய தொடங்கும் என்பதை மறந்துவிடக்கூடாது.

தொகுப்புரை

இலங்கையில்காணி சம்மந்தமான சட்டங்களை குறித்து நூல் எழுதுவதானால் குறைந்தது இரண்டாயிரம், மூவாயிரம் பக்கங்கள் எழுதலாம். தற்போதைய நீதியமைச்சரான விஜேயதாச ராஜபக்ஷ் The Law of Property part 1,Part 11, Part 111 ஆகிய நூல்களை 1500 பக்கங்களுக்கு மேல் எழுதியபோதும் அது பூரணமடையவில்லை என கூறுவதை நாம் காணலாம். ஆகவே நிலம் சம்மந்தமான சட்டம் அவ்வளவு பரந்ததும் விஸ்தீரணமானதுமான ஒரு விடயமாகும். அப்படியானால் புத்தகங்களை எழுதாமல் கண்ட விடயங்களை ஆதனச் சட்டம் என்று கூறி புத்தகங்களை எழுதுவதால் பயனில்லை.

ஆதனச்சட்டத்தைப்பற்றி புத்தகங்களை எழுதும் போது அல்லது கட்டுரைகளை எழுதும் போது ஆதனச் சட்டத்தின் மூல தர்மங்களை மட்டுமல்ல அது சம்மந்தமாக உயர் நீதிமன்றங்கள் அளித்துள்ள தீர்ப்புகளையும் எழுத வேண்டும். இல்லையேல் பொதுமக்களை அந்தரத்தில்விடுபவர்களாக இருப்பர்.

இந்த கட்டுரையில் ஆதனச் சட்டத்தின் மூன்று முக்கிய விடயங்கள் பற்றியே எழுதப்பட்டுள்ளது. விசேடமாக உறுதிகள் பற்றி எழுதியது கவனத்திற்குரியது சாதாரணமாக ஒருவர் நொத்தாரிஸ் ஒருவரிடம் சென்று உறுதியொன்றை எழுதும்போது அந்த காணி விற்பவருக்கு உரியதா? எனப் பரிசீலனை செய்ய வேண்டியது நொத்தாரிஸின் கடமையாகும். ஆனால் காணியை வாங்குபவர் அதற்குரிய அவகாசத்தை வழங்குவதில்லை. உடனடியாக எழுதவேண்டும் என்று நொத்தாரிஸை வற்புறுத்துவது உண்டு. நொத்தாரிஸூம் செய்வது தெரியாது எழுதுவதுண்டு இதனால் இந்த உறுதி சில சமயம் உரிய இதழில் பதியப்படாமல் விடுவதுமுண்டு. வேறு ஒரு இதழில் பதியப்பட்ட இடமுண்டு. இதனால் சில காணிகளுக்கு இரண்டு மூன்று உறுதிகள் இருப்பதைக் காணலாம். அதன் விளைவு முன்னுரிமை இழப்பு அவருக்கு உதவும். அத்துடன் நொத்தாரஸூக்கும் அவப்பெயர் ஏற்படும்.

இரண்டாவது காணியைக் காட்டி பணத்தை வாங்கி விட்டு பின்னர் அக்காணியை கைமாற்றுபவர்களும் உண்டு.அவர்கள் ஆவணமாக இருக்க இரண்டாவது விடயம் உதவும்.

மூன்றாவது காணியின் அபிவிருத்தி சம்பந்தமானது இதில் நன்நோக்கம், தீயநோக்கம் என்ற வேறுபாடு உணர்த்தப்பட்டுள்ளது. சாதாரணமாக எந்த

நோக்கத்தைக் கொண்டதாக அபிவிருத்தி நடந்தால் அபிவிருத்திக்குரிய பணத்தை பெறலாம் .

ஆனால் தீயநோக்குள்ளவர் காணியை அபிவிருத்தி செய்தால் அக்காணியில் நீதிமன்றம் வெளியேற்ற தீர்ப்பு அளித்த பின்னரும் இருக்கலாம் என்ற எண்ணத்துடன் அபிவிருத்தி செய்பவர்களுக்கு உண்டு. அப்படியானவர்கள் அபிவிருத்தி செய்ய முயற்சித்தால் உரித்தாளர் உடனடியாக அவர்களுக்கு அறிவித்தல் கொடுத்து தடை செய்ய வேண்டும். முடியுமானால் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து தடையாணையை பெற வேண்டும்.இல்லையேல் ஆட்சியுரிமை அவருக்கு சார்பாக வேலை செய்ய தொடங்கும்.

இலங்கை சட்டத்தில் கொடை பற்றிய தகவல்கள்

கொடை என்பது எவ்வித பிரதிபலனையும் அல்லது பணத்தையும் கொடுத்து பெறாமல் ஒருவர் மீது இன்னுமொருவர் கொண்டுள்ள அன்பு, பட்சம், கருணை ஆகிய காரணங்களில் ஒன்றை அல்லது பலவற்றை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் ஒரு முறையாகும். பிரதானமாக இது வழங்கப்படுவது கொடையை பெறுபவரின் அல்லது பெறுபவர்களின் நல அபிவிருத்தியை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்றஉன்னத நோக்கத்தில் வழங்கப்பபடுவதாகும். இது உறவினர் இடையே நடைபெறுவது வழக்கமாயினும் பொது சமூக நலனுக்காகவும் பிறராலும் வழங்கப்படுகிறது. இன்று நாம் பார்க்கப்போவது இக்கொடையை பற்றியேயாகும். இது Gift என்று Donation என்றும் இரண்டு ஆங்கிலச் சொற்களாலும் அழைக்கப்படுகிறது.

கொடை பொதுவானது

இலங்கையின் பொதுச் சட்டம் உரோம டச்சுச் சட்டமாகும். இச்சட்டத்தின் கீழ் (justa Causa) நல்லேது என அழைக்கப்படும் நீதியான முறையில் கீழ் உள்ள சில ஒழுங்குகளின் கீழ் இக்கொடை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இலங்கையிலும் இது ஏற்கப்பட்டுள்ளது. கொடை கொடுப்பவருக்கு கொடையை பெறுபவர் மீது சாதாரணமானதும் நியாயமானதுமான காரணம் ஒன்று இருக்க வேண்டும். ஆங்கில சட்டத்தில் ஒரு ஒப்பந்தத்திற்கு இருக்க வேண்டிய மதிபலன் (Valuable Consideration) போல் உரோம டச்சுச்சட்ட கொடை ஒப்பந்தத்திற்கு மதிபலன்

இருக்க தேவையில்லை. விவாகத்தின் பின்னர் குடும்பத்தை அபிவிருத்தி செய்ய உறவினர்களின் உதவிக்கு கைமாறு செய்ய சமூக நலனை நோக்கமாகக் கொண்டவை போன்ற நல்லேத்துக்கள் இக்கொடை ஒப்பந்தத்திற்கு தேவையாக உள்ள காரணிகளாகும்.

கொடையானது மோசடி தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கொடை கொடுப்பவரும் கொடையை பெறுபவரும் இரு சாட்சிக்காரரும் ஒப்பம் இடும் உறுதி மூலமே கொடுக்கப்பட வேண்டும். உரோம டச்சுச் சட்டத்தின் படி மேற்படி உறுதியில் கொடை கொடுப்பதை கொடை பெறுபவரும் ஏற்றுக்கொண்டால்தான் அங்கு வலிதான கொடை ஒப்பந்தம் ஏற்பட்டது என்று கொள்ளப்படும். கொடைபெறுபவர் உடனடியாகவும் ஏற்கலாம் விசேட காரணங்கள் இருப்பின் பின்னரும் ஏற்கலாம். அதேபோல் செய்கையின் மூலமும் ஏற்றுக் கொள்ளலாம் அவர் நேரிடையாக ஏற்றுக்கொள்ள முடியாவிட்டால் அவரது வேண்டுகோளின்படி இன்னுமொரு உறவினர் அதனை ஏற்றுக் கொள்ளலாம். பின்னர் பிரச்சினை எழாமல் இருக்க வேண்டுமானால் கொடையை பெறுபவரே அதனை ஏற்றுக்கொள்வதே புத்திசாலித்தனமானது.

கொடையானது நிபந்தனைகளுடன் அல்லது நிபந்தனை அற்ற முறையிலும் வழங்கலாம். விவாகம் சம்மந்தமாக வழங்கப்படுகின்ற கொடை உறுதியானது.விவாகம் நடைபெறாவிட்டால் அதனை இரத்துச் செய்யலாம்.விவாகம் நடைபெற்று, பின்னர் விவாகம் இரத்துச் செய்யப்பட்டால் விவாக ஒப்பந்த நிபந்தனை முறிவடைந்துள்ளது.என்ற காரணத்தைக் காட்டி கொடை உறுதியை இரத்துச் செய்யுமாறு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யலாம்.

சீவிய உரித்துக்கு உட்பட்டுவழங்கப்படுகின்ற கொடை வழங்கியவர் மரணிக்கும் வரை அல்லது அவர் அதனை இரத்துச் செய்யும்வரை தொடர்ந்து வலுவில் இருக்கும்.

சில சமயங்களில் சீவிய உரித்துக்கு உட்பட்டு எழுதப்படுகின்ற கொடை உறுதியில் குறிக்கப்பட்டுள்ள காணியை விற்பனை செய்ய வேண்டுமானால் கொடையை பெற்றவரும், சீவிய உரித்து உரிமை உள்ளவரும் கையொப்பம் இடவேண்டும்.

சில சமங்களில் சீவிய உரித்துக்கு உட்பட்டு பெறப்பட்ட கொடைக்காணியை கொடையைப் பெற்றவர் இன்னுமொருவருக்கு உதாரணமாக தனது மகளுக்கு கொடையளிக்க வேண்டுமென்றால் சீவிய உரித்துள்ளவரின் கையொப்பமும் அதில் இருக்க வேண்டும்.

கொடை ஒன்று நிபந்தனையுடன் எழுதப்படும் போது அந்த நிபந்தனையில் கொடை கொடுத்தவர்தான் விரும்பின் ஒரு தலைபட்சமாக அந்த கொடை உறுதியை இரத்துச் செய்யலாம் என்றும் அதற்கு தேவையானது இரத்துச் செய்பவர் கொடையை மீளப்பெறும் உறுதி ஒன்றை எழுதி மீளப்பெறலாம் என்ற கருத்து ஒன்று உண்டு. ஆனால் உயர் நீதிமன்ற நீதியரசர் ஜே.அமரசிங்க தனது தீர்ப்பு ஒன்றில் மீளப்பெறுதலை தன்னிச்சையாக செய்ய முடியாது என்றும் நீதிமன்றத்தின் தீர்ப்பு அவசியம் எனக் கூறியுள்ளார். கொடை உறுதியில் கொடை கொடுப்பவரும் கொடையை பெறுபவரும் ஆகிய இருவரும் கையெப்பமிட்டு சில நிபந்தனைகளுன் ஒப்பந்தத்தை செய்கின்றனர். ஒருவர் மற்றவருக்கு தெரியப்படுத்தாமல் ஒரு Revocation உறுதியை எழுதி

ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வர முடியாது என்றும் இயற்கை நீதிக்கு இது மாறானது என்றும் தனது தீர்ப்பு ஒன்றில் “Obitered”ஆக கூறியுள்ளார்.

சில கொடை உறுதிகளில் கொடையை நிறைவேற்றும்போது ‘‘எச்சந்தர்ப்பத்திலும் இக்கொடையை மீளப்பெற முடியாது’’ என்ற வாக்கியத்தை எழுதுவதுண்டு. எனினும் அத்தகைய உறுதியை பின்வரும் முறையில் வலுவிழக்கச் செய்யலாம். அதாவது கொடையை கொடுத்தவரும் கொடையைப் பெற்றவரும் இணைந்து Deed ofRevocationஉறுதியை எழுதினால் முன்னைய உறுதி வலுவிழந்துவிடும்.

கொடை உறுதியை எழுதும்போது மிக கவனமாக எழுத வேண்டுமென்பதற்கு பின் வரும் உயர்நீதிமன்ற வழக்குகளை படிக்கவும் டொன்லோரா சில்வா எதிர் சுமணாவதி (2007)SLR மற்றையது விஜயசிங்க எதிர் மொகமது (44 NLR)இதில் சுமணாவதி வழக்கு முக்கியமானது.

இறப்பை எதிர்நோக்கி வழங்கும் கொடை

கொடை வழங்குபவர் தனது இறப்பை எதிர்நோக்கி வழங்கும் இக் கொடையானது ‘‘மரணத்தை எதிர்நோக்கி வழங்கும் கொடை’’ என அழைக்கப்படும்.

கொடையாளர் இறந்தால் இது அமுலுக்கு வரும் இறக்காவிட்டால் இக்கொடை இரத்துச் செய்யப்படும். அதேபோல் கொடையை வழங்குபவருக்கு முன்னர்

கொடையை பெறுபவர் இறந்து விட்டால் இக்கொடையானது வலுவிழந்துவிடும்.

கொடை அளித்தவர் இறக்காவிட்டால் அவர் விரும்பிய நேரத்தில் இதனை இரத்துச் செய்யலாம். நீதிமன்றம் செல்ல தேவையில்லை.

இந்த உறுதியை கவனமாக கையாள வேண்டும். ஏனெனில் இந்த உறுதியின் படி கொடை அளித்தவர் அந்த கொடையை பெற்றவருக்கு அவரது சொத்துக்களை கையளித்து விடுவார். கொடையை பெற்றவர் கொடையை கொடுத்தவருக்கு முன்னர் இறந்தால் அக்கொடை உறுதி இரத்துச் செய்யப்படும். ஆனால் கொடையை பெற்றவர் இறந்தால் அக்கொடையை உறுதியில் குறிக்கப்பட்டுள்ள காணிகள் அனைத்தும் கொடையைப் பெற்றவரின் உரிமைக்காரருக்கு சென்று விடும் என்பதை மனதில் கொள்ள வேண்டும் ஆகவே இதில் மிக கவனமாக இருக்க வேண்டும்.

கொடை உறுதி ஒன்றை இரத்துச் செய்வதற்கான வழக்கு

ரோம டச்சுச் சட்டத்தின் கீழ் கொடையைப் பெற்றவரின் நன்றியில்லாத் தன்மையையும் கொடூரத்தையும் நீதிமன்றத்தில் நிரூபிப்பதன் மூலம் அக்கொடை உறுதியை இரத்துச்செய்யலாம். இச்சட்ட விதி இலங்கையிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இது சம்மந்தமாக சில வழக்குகளை பார்ப்போம். லோரா சில்வா எதிர் சுமாணாவதி (மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்கு) இவ் வழக்கில் கூறப்பட்டுள்ளது. என்னவெனில் கொடை பெற்றவரின் நன்றியின்மை

அல்லது கொடூரம் எப்படி இருக்க வேண்டும் என்று எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

1. கொடையை பெற்றவர் கொடையை வழங்கியவருக்கு துரோகம் செய்திருக்க வேண்டும்.
2. பலாத்காரத்தின் மூலம் கொடைகொடுத்தவருக்கு கடும் காயம் விளைவித்திருக்க வேண்டும்
3. கொடை பெற்றவர் வஞ்சகமாக கொடையை கொடுத்தவரின் சொத்துக்கு நட்டத்தை செய்திருக்க வேண்டும்.
4. கொடை கொடுத்தவரின் உயிரை பறிப்பதற்கு முயற்சி செய்து இருக்க வேண்டும்.
5. கொடை உறுதியில் உள்ள நிபந்தனைகளை மீறியிருக்க வேண்டும்.
6. மேலேயுள்ளவற்றுக்கு சமமான காரியங்கள் செய்யப்பட்டடிருக்க வேண்டும் என்றும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

டோனா பொடிநோனா ரணவீரமெனிக்கே எதிர் ரோஹினி சேனாநாயக்க வழக்கில் புதுமையான தீர்ப்பு ஒன்று வழங்கப்பட்டுள்ளது. பொடி நோனா தனது மகளான ரோஹினிக்கு அலபலாதெனிய என்னும் காணியை அவளது விவாகத்தை எதிர்பார்த்து 1967 இல் கொடை அளித்திருந்தாள். ஆகவே அந்தகொடை விவாகத்தை எதிர்பார்த்து வழங்கிய கொடையாகும். இது ஆங்கிலத்தில் (Dona Tio PropterNuptias)என அழைக்கப்படும்.

கொடையில் எதிர்பார்க்கப்பட்டபடி ரோஹினிக்கு விவாகம் நடைபெற்றது. 1979 ஆம் ஆண்டளவில் ரோஹினி தனது தாயாரை அடிக்கத் தொடங்கினாள். இதனால் தாய் தான் வழங்கிய கொடையை இரத்துச் செய்ய வழக்கை தாக்கல் செய்தாள். அன்பு,பட்சம், கருணையின்மையின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் மேன்முறையீட்டு நீதிமன்றம் அவளது வழக்கை தள்ளுபடி செய்தது. மேம்முறையீட்டு நீதிமன்றம் வழக்கைத் தள்ளபடி செய்ததற்கு பின்வரும் காரணங்களை கூறியது.

1. மேற்படி கொடை விவாகத்தை எதிர் பார்த்து வழங்கப்பட்டது.
2. எதிர்பார்த்த திருமணம் அப்படியே நடை பெற்றது.
3. ஆகவே கொடையை இரத்துச் செய்ய வழக்கெழு காரணம் இல்லை என்று வழக்கைத் தள்ளுபடி செய்தது.

செய்ந்நன்றி மறத்தலின் கீழ் உள்ள கொடை வழக்குகள்

(Ram Rep. 1872 -76 Page32)

இந்த வழக்கில் வழக்காளி தனது வீடுகளில் ஒன்றை எதிராளிக்கு கொடுத்தாள். எதிராளி வழக்காளியின் மருமகள் ஆவார். அந்த உறுதியில் தனது சீவிய உரித்துக்குட்பட்டே இக் கொடை வழங்கப்பட்டது. கொடையை பெற்றவள் வழக்காளியுடனேயே வாழ்ந்து வந்தாள்.

பின்னர் கொடையைப் பெற்றவள் சூட்சுமமாக வழக்காளியை பல்வேறு வழிகளிலும் தாக்கத்

தொடங்கினாள். வழக்காளி தொடர்ந்தும் அவ்வீட்டில் வசிக்க விருப்பமில்லாதவாறு நடந்து கொண்டாள். வழக்காளி வழக்கை தாக்கல் செய்து கௌரவமான ஒரு பெண் வாழக்கூடியவாறு அவ்வீடு இருக்கவில்லை என்று கூறி தான்கொடுத்த கொடையை அவ்வீட்டை மீளப்பெற வழக்கை தாக்கல் செய்தாள்.நீதிமன்றம் அவ் வீட்டைத் திருப்பி கொடுக்க வேண்டுமென்று கொடையை பெற்றவளுக்கு கட்டளையிட்டது.

கரோலிஸ் எதிர் டொன் டேவிட் என்ற வழக்கில் கொடையை பெறுபவர் பண்பாக நடக்க வேண்டுமென்று கோரப்பட்டிருந்தார். இதற்கு மாறாக அவர் நடந்ததால் கொடையை மீளப்பெறலாம் எனத் தீர்க்கப்பட்டது.

சிவகாசிப் பிள்ளை எதிர் அந்தோனிப்பிள்ளை என்ற வழக்கில் விவாகமான பெண் ஒருத்தி தனது கணவனுக்கு எதிராக வழக்கை தாக்கல் செய்திருந்தாள். தன்னால் கணவனுக்கு கொடுக்கப்பட்ட கொடையை இரத்துச் செய்யுமாறும் ஏனெனில் தன்னையும் தனது பிள்ளைகளையும்வீட்டை விட்டு வெளியே கணவன்துரத்தி விட்டதாகவும் முறைப்பாடு செய்திருந்தாள். இதனை விசாரித்த நீதியரசர் சூட்ஸ் அவர்கள் மேலே கூறப்பட்ட காரணம் அதாவது வழக்காளியையும் பிள்ளைகளையும் வெளியேற்றியதுநன்றியின்மைக்குள் வராது என்றும் உரோமடச்சுச் சட்டத்தின் கீழ் அக் கொடையை மீளப் பெறமுடியாது எனவும் தெரிவித்தார்.

அளிக்கப்பட்ட கொடையை மீளப்பெற முடியாது என்பதற்கு சாதகமான தீர்ப்புக்களே அதிக அளவில் உள்ளன. உதாரணமாக சீவிய உரித்துக்கு உட்பட்டு ஒருவர் கொடை அளிக்கின்றார். என வைத்துக் கொள்வோம். இந்நிலையில் கொடையை பெற்றவர்

அந்த சொத்தை விற்கவோ வேறு ஒரு சொத்துடன் பரிவர்த்தனை செய்யவோ தன் குழந்தைகளுக்கு கொடை அளிக்கவோ முடியாது. அதன் பின்னர் கொடையை வழங்கியவர் அக்கொடையை மீளப்பெற வழக்கைத் தாக்கல் செய்கின்றார் எனவும் வைத்துக் கொண்டால் அது அர்த்தமற்ற செயல் ஒன்றாகவே அமையும். பெயர் அளவிலேயே சொத்து கையளிக்கப்பட்டது என்றே கொள்ள வேண்டும். உண்மையில் கொடையளித்தவரின் நிலையில் மாற்றம் இல்லை. மேலும் கொடை ஒன்றை வழங்கும்போது கொடையைப் பெறுபவர் தான் நன்றியுடன் அதனை ஏற்றுக் கொள்வதாக கூற வேண்டும்.

பின்னர் கொடையை வழங்கியவர் நீதிமன்றம் சென்று கொடையை இரத்துச் செய்யுமாறு கேட்டால் அது ஒருதலைப் பட்சமானதாகவே இருக்கும்.இந்நிலையில் நீதிமன்றம் கொடையை இரத்துச் செய்வதில் ஆர்வம் உள்ளதாக இருக்காது. ஆயினும் நன்றியின்மையை தெளிவாகக் காட்டினால் மட்டுமே நீதிமன்றம் கொடையை இரத்துச் செய்யும் எனலாம்.

கிருஷ்ணசாமி எதிர் தில்லையம்பலம் வழக்கில் நீதியரசர் பஸ் நாயக்க அவர்கள் பின்வருமாறு கூறினார்.நன்றியின்மையை காட்டும் செயல் பல இருக்க வேண்டும் என்ற நியதியில்லை என்றும் ஒரு செயலே போதுமானது என்றும் கூறியதுடன் இது சம்பந்தமாக கடுமையான சட்ட விதி இல்லை என்றும் கூறினார்.

லியனகே எதிர் பெரேரா என்ற வழக்கில் கொடை பெற்றவர் வேறு ஒரு வழக்கில் கொடைகொடுத்தவருக்கெதிராக சாட்சியம் கூறினார். இது நன்றியில்லாத செயல் என்று கூறி தனது கொடையை மீளப்பெற வழக்கைத் தொடுத்தார்.

நீதிமன்றம் கூறியது என்னவெனில் சாட்சியம் கூறுபவருக்கெதிராக நடவடிக்கை எடுக்கமுடியாது என்றும் அவருக்கு பரிபூரண விடுபாட்டு உரிமையுண்டு என்றும் கூறி அதனை கொடையுடன் தொடர்புபடுத்தி நன்றியின்மைஎன்று கூறி கொடையை மீளப் பெற முடியாது என்றும் கூறியது.சில்வா எதிர் பாலசூரிய வழக்கிலும் இது பின்பற்றப்பட்டது.

இலங்கையில் சாட்சியச் சட்டத்தை பொறுத்தவரை ஆங்கிலச் சட்டக் கோட்பாடே பொருந்தும் என்றும் உரோம டச்சுச் சட்டக்கோட்பாடு கவனிக்கப்படுவதில்லை என்றும் கூறி சாட்சியம் கூறுபவருக்கு எதிராக நன்றியில்லா வழக்கை தாக்கல் செய்ய முடியாது என்றும் நீதிமன்றம் கூறியது.

கண்டியச் சட்டத்தின் கீழ் கொடையை இரத்துச் செய்தல்

கண்டியச் சட்டத்தின் கீழ் சொத்து ஒன்றை மூன்று வழிகளில் கொடை கொடுக்க முடியாது.

1. சேவை செய்யும் ஒருவருக்கு அவரது சேவையின் பொருட்டு நிபந்தனைகளுக்கு அமைய கொடை வழங்குதல்.
2. நல்வாழ்வை எதிர்பார்த்து கொடையை வழங்குதல்.
3. எதிர்காலத்தில் தன்னை கவனிப்பார் என்று கருதி கொடையை வழங்குதல்.1938 ஆம் ஆண்டு 39ம் இலக்க கண்டியச் சட்டத்தின் திருத்தத்தின் பிரகாரம்
4. (1) ஆம் பிரிவுக்கு அமைய கொடை அளித்தவரின் விருப்பத்தின்படி தான்அளித்த

கொடையை மீளப்பெறலாம் என்று கூறப்பட்டுள்ளது. இது உறுதி மூலம் இரத்துச் செய்யப்படலாம்.
ஆயின் பின்வரும் சந்தர்ப்பங்களில் கொடையை இரத்துச் செய்ய முடியாது.

1) பௌத்த தேவாலயங்களின் சட்டத்தின் 20 ஆம் பிரிவின்படி பௌத்த தேவாலயங்களுக்கு கொடையளிக்கப்பட்ட பூசை உறுதிகள் மீளப்பெற முடியாது.
2) விவாகத்தை எதிர்பார்த்து வழங்கப்படும் கொடையானது விவாகம் நடைபெற்றதன் பின்னர் ரத்துச் செய்யப்பட்ட முடியாது.
3) கொடையை இரத்துச் செய்ய முடியாது என்ற நிபந்தனையின் கீழ் வழங்கப்படும் கொடை உறுதிகளை பின்னர் இரத்துச் செய்யமுடியாது.
4) தர்மகாரியங்களுக்காக வழங்கப்படும் கொடைகளை மீளப்பெற முடியாது.
ஆயின்நிபந்தனையுடன் கொடுக்கப்பட்ட கொடையை மீளப்பெற முடியும் என்பது அப்புஹாமி எதிர் கிரிமெனிக்கே வழக்கில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
மேலேயுள்ளவையே கண்டியச் சட்டத்தின் கீழ் கொடை பற்றி அறிய வேண்டியவையாகும்.

புத்தி குறைந்தவர்களால் வழங்கப்படும் கொடை

புத்தி குறைந்தவர்களால் வழங்கப்படும் கொடைகள் பற்றியும் அறிய வேண்டும்.உரோம டச்சுச் சட்டத்தின்படி பித்துப் பிடித்தவர்களால் வழங்கப்படும் கொடைகள் வெறிதானது (Void) ஏனெனில் கொடையை வழங்குபவர் தான் செய்யும் செயல் சரியானதா? பிழையானதா? என்பதை அறியக்கூடிய நிலையில் இல்லாதிருப்பதேயாகும். ஆனால் ஆங்கிலச் சட்டத்தில்

கொடையளித்தவர் கொடையை அளிக்கும் போது அச்செயலை புரிந்து கொள்ளாமல் ஒருவர் கொடையை அளித்தார் என கூறினால் அக்கொடை சுயமாக வெறிதாகாது (Voilable) இதற்குக் காரணம் வழக்கில் சம்மந்தப்பட்ட மறுதரப்பினர், அவர் ஒப்பந்தத்தை செய்து கொள்ளும் போது அதை உணரக்கூடிய நிலையில் இல்லை என்பதை நிரூபிக்க வேண்டிய நிலை உள்ளார்கள் என்பதனாலாகும்.

உதாரணமாக ஒருவர்தனது சகோதரர்களுக்கு அல்லது பெற்றோர்களுக்கு ஒரு கொடையை வழங்கும் போது செயலை உணராமல் செய்தார் என்று கொள்ள முடியாதிருப்பதனாலாகும்.இவ்விடயம் பற்றி பல வழக்குகளில் ஆராயப்பட்டது.சொய்சா எதிர் சோசா வழக்கில் இது பற்றி ஆராயப்பட்டு பின்வருமாறு தீர்க்கப்பட்டது. ‘‘ஓவ்வொரு வழக்கும் அந்நிகழ்வுகளை பொறுத்து அமையும் எனப்பட்டது.

இளம் வயதினர் வழங்கும் கொடை

இளம் வயதினர் ஒரு வலிதான கொடையை வழங்க வேண்டுமானால் சிவில் நடவடிக்கை முறைச் சட்டத்தின் படி பாதுகாவலன் ஒருவரை நியமித்தே அதனை வழங்க வேண்டும்.இல்லையேல் அக்கொடை செல்லாது. குணசேகர ஹாமினி எதிர் டொன் பாரன் என்ற வழக்கில் இவ்வாறு தீர்க்கப்பட்டது.இவ்வழக்கில் பெற்றோரின் உதவியுடன் வழங்கப்பட்டது. தவறு எனப்பட்டது. ஏனென்றால் பெற்றோர் செயற்கை பாதுகாவலன் என்ற பிரிவிற்குள் வரவில்லை என ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆகவே செயற்கை

பாதுகாவலன் ஒருவன் நியமிக்கப்பட்டே வழக்கை நடத்த வேண்டும்.

முஸ்லிம் சட்டத்தின் கீழ் கொடை

இஸ்மாயின் எதிர் மொகமது (35 NLR) இந்த வழக்கில் முஸ்லிம் ஒருவர் சில இடங்களை தனது மைத்துனருக்கு கொடையளித்தார். கொடையை மீளப்பெறவும் சீவிய உரித்துக்கு உட்பட்டும் இக்கொடையை அவர் கையளித்தார். கொடையை மைத்துனர் ஏற்றுக் கொண்டார். இக்கொடை வழங்கப்பட்ட காணியிலேயே கொடையை பெற்றவர் வசித்து வந்தார். பின்னர் கொடையை வழங்கியவர் தனது சீவிய உரித்தையும் கொடையை மீளப் பெறும் உரித்தையும் விலக்கிக்கொண்டு உறுதி ஒன்று எழுதினார்.

நீதிமன்றம் கூறியது என்னவெனில் உரோமன் டச்சுச் சட்டக் கோட்பாடுகளை அனுசரித்து இது நடைபெற்றுள்ளது. ஆகவே முன்னர் அளிக்கப்பட்ட கொடை உறுதியும் பின்னர் நிறைவேற்றப்பட்ட மீளப் பெறுதல் உறுதியையும் இணைக்கும் போது அவை முஸ்லிம் சட்டத்தின் கீழ் செல்லுபடியாகும் என்று கூறியது.

சுல்தான் எதிர் பீரிஸ் என்ற வழக்கில் ஒரு முஸ்லிம் கொடையுறுதியில் தனது சீவிய காலத்தில் தான் அக்காணியில் வசிக்கலாமென்றும் அந்தக் காணியில் இருந்தும் கிடைக்கும் வருமானம்,உற்பத்திப் பொருட்கள் ,வருமானம் எல்லாவற்றையும் தான் கொடை வழங்கும் கணியில் இருந்து பெற முடியும் என்றும் கூறி கொடை உறுதியை வழங்கினார். இதில் கொடை பெற்றவர் தலையிட முடியாது எனவும் கூறியிருந்தார்.

நீதிமன்றம் கூறியது என்னவெனில் இந்த கொடை உறுதி வலுவற்றது என நீதிமன்றம் தீர்த்தது. முஸ்லிம் சட்டத்தின் கீழ் இது வலிதற்றது என்று தீர்த்தது. இவ்வுறுதியானது கொடையளிக்கப்பட்ட காணியின் உடமை கையளிக்கப்படவில்லை என்று கூறியது. ஆகவே முஸ்லிம் வட்டத்தின் கீழ் வலிதற்றது என்று தீர்த்தது.

தொகுப்புரை

கொடைகள் அசையும் சொத்தாலும் நடைபெறலாம். அசையா சொத்தாலும் நடைபெறலாம். அசையாச் சொத்தால் நடைபெறும் கொடைகள் மோசடி தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவிற்கு அமைய எழுதப்பட வேண்டும். நொத்தாரிஸ் ஒருவர் முன்னிலையிலும் இரண்டு கட்சிக்காரர் முன்னிலையிலும் எழுதப்பட வேண்டும்.

கொடை உறுதி ஒன்றை மீளப்பெற வேண்டுமானால் அதனை அவ்வுறுதியில் குறிப்பிட வேண்டும். அதிகமான கொடைக் காணிகள் விவாகம் சம்மந்தமாகவே எழுதப்படுகின்றன.

யாழ்ப்பாண கலசாரத்தைப் பொறுத்த வரையில் கல்யாணம் ஒன்றுக்கு கொடை விசேடமாக காணி சீதனமாக கொடுக்கப்படுவது பல நூற்றாண்டு காலங்களாக இருந்து வருவதாக ஆங்கிலேயர் தாம் எழுதிய நூலில் குறிப்பிட்டுள்ளதோடு அச்சீதனக் கொடையானது கல்யாணப் பேச்சின் போதும் கல்யாண தினத்திலும் பின்னரும் கொடுக்கப்பட இடமுண்டு என்றும் அவர்கள் கூறியுள்ளனர். ஏனைய

சமூகத்தவரும் விவாகத்தின் பொருட்டு சீதனமாக கொடையை வழங்குகின்றனர்.

வழங்கப்பட்ட கொடைகளை மீளப்பெற நீதிமன்றத்தை நாட வேண்டும் என்று சில தீர்ப்புகளும்

சுயேச்சையாக இருபகுதினரும் இணைந்து மீளப்பெற முடியும் என்றும் சில தீர்ப்புகளும் உள்ளன.

கொடையைப் பெறுத்தவரையில் எந்தவித பிரதிபலனையும் எதிர்பார்த்தோ பணத்தைக் கொண்டோ இதனை வழங்குவதில்லை. அன்பு, பட்சம், கருணை காரணமாக இது வழங்கப்படுகின்றன.

உரோம டச்சு சட்டத்தின் சட்டக் கொள்கையினை கொடை விதிகளே இலங்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நல்லேதுக்கள் இருப்பின் கொடையை மீளப்பெறலாம். இளம் வயதினர் கொடையை வழங்கும் போது செயற்கையான பாதுகாவலன் ஒருவனை நியமித்தே அதனை வழங்குவது சிறந்தது. முஸ்லிம்களும் கொடையை வழங்கலாம். விவாகத்தின் போது அவர்களும் கொடையை வழங்குகின்றனர்.

சோரம்பற்றிய ஓர் ஆய்வு

வாழ்வுக்கு அடிப்படை குடும்பமாகும். குடும்பத்திற்கு அத்திவாரம் அன்பு ஆகும் அன்புள்ள குடும்பத்தைதிருக்குடும்பம் எனவும் அழைப்பர். இத்திருக்குடும்பத்திற்கு உதாரணபுருஷர்களாக விளங்குபவர்கள் தாயும் தகப்பனுமாவர் .

இத்திருக்குடும்பத்திற்குரிய இலட்சணத்தை மூதாதையோரில் இருந்து காணலாம். பாட்டன், பாட்டி, தகப்பன், தாய், சகோதரன், சகோதரி ஆகியோரின் வாழ்வு திருக்குடும்பத்திற்கு அத்திவாரமாகிறது. வழிகாட்டியாகிறது.

அக்குடும்பத்தை வழிநடத்துவது அன்பாகும். குரோதம் என்பது அங்கில்லை. பேராசை, பொறாமை என்பது இங்கில்லை. சிலர் இத்தகைய குடும்பத்தை வழிநடத்துவது இறைவன் என்பர். ஆன்மீகவாதிகளே அவ்வாறு கூறுவதுண்டு. ஆனால் குடும்பத்தின் பின்னணியே அதற்கு உதவுகிறது.

பண்டையகாலத்தில் எல்லா சமூகங்களிலும் விசேடமாக கீழைத்தேசத்தில் இக்குடும்ப பண்பே நிலவியது. ஆனால் காலக்கிரமத்தில் விஞ்ஞான வளர்ச்சியாலும் உலோகாயுத வாத கருத்துக்களாலும் மற்றும் சில காரணங்களாலும் இந்நிலை மாறத் தொடங்கியது.

அமெரிக்க ஆய்வு ஒன்றில் திருக்குடும்பப் பண்பு 90/100 வீதமாக மாறத் தொடங்கியுள்ளது என கண்டறியப்பட்டுள்ளது. இதற்கு அடிப்படைக் காரணம் குடும்பம் என்பதற்கு தேவையான அன்பு அல்லது குடும்பப் பண்பு இல்லாதது எனவும் கூறப்பட்டுள்ளது.

இதற்கு காரணமாக அமைந்தது பொருளாதாரமும் அதன் பிரதிபலிப்பான நவீன வாழ்க்கையும் என்றும் கூறலாம். இதனால் நாடுகள் இச்சமூகத்திற்கு தேவையான சட்டங்களை இயற்ற வேண்டியேற்பட்டது. அவ்வாறு இயற்றப்பட்ட சட்டங்கள் சில குடும்ப அலகுக்கு உதவுவதாகவும் சில சட்டங்கள் பாதிப்பதாகவும் அமைந்தன எனலாம். அத்தகைய சட்டங்களில் ஒன்று விவாகரத்து என்று கூற வேண்டும்.

இலங்கையில் விவாகம், விவாகரத்து சம்பந்தமான சட்டம்

இலங்கையில் பல்லினம் பல மதங்களைக் கொண்டவர்கள் வாழுகிறார்கள். அவர்களது கலாசாரத்திற்கமைய விவாகம், விவாகரத்து சம்பந்தமான சட்டங்கள் பல இருக்கின்றன. இவை பிரத்தியேக சட்டங்கள் என அழைக்கப்படுகின்றன. கண்டியர்களுக்கு கரையோர சிங்கள மக்களிலிருந்து வேறுபட்ட ஒரு சட்டமும் முஸ்லீம்களுக்கு அவர்களதுமதத்தின் கோட்பாடுகளுக்கமைய இஸ்லாமிய சட்டமும் இருப்பதுடன் பொதுவான சட்டமாக பொது திருமணக்கட்டளைச் சட்டம்(G.M.O)என அழைக்கப்படுகின்ற ஒரு சட்டமும் உண்டு. பிரத்தியேக சட்டத்தால்ஆளப்படாதவர்கள்இப்பொதுத் திருமணக்கட்டளைச்சட்டத்தாலேயேஆளப்படுகிறார்கள். இன்று நாம் பார்க்கப்போவது இப்பொதுச்சட்டத்தின் கீழ் விவாகரத்து பற்றியதாகும். விசேடமாக சோரம் பற்றியதாகும்

பொதுச் சட்டத்தின் கீழ் விவாகரத்துக்கு தேவையான காரணங்கள்

இலங்கையில் பொதுச்சட்டத்தால் ஆளப்படுபவர்கள் விவாகரத்து பெறவேண்டுமானால் தகுதியான நீதிமன்றத்தில் மட்டுமே அதனை பெறமுடியும். தகுதியான நீதிமன்றம் என்பது மாவட்ட நீதிமன்றம்(District Court)ஆகும். இந்நீதிமன்றத்தால் வழங்கப்படாத தீர்ப்பு எதுவும் விவாகரத்தை வழங்கியதாக சட்டம் கொள்வதில்லை.

ஆகவே விவாகரத்தை பெறவிரும்பும் ஒருவர் பின்வரும் காரணங்களில் ஒன்று அல்லது பலவற்றைக் கூறி விவாகரத்தை மாவட்ட நீதிமன்றத்தில் கோரலாம்.

அ.சோரம்போதல் (Adultery) இல்ஆங்கிலச் சொல்லுக்கு அகராதியில் விபசாரம் என்றும் பெயர் கூறப்பட்டுள்ளது.

ஆ.வன்ம உறவு அறுத்தல் .

இ.ஆண்மையின்மை என்பனவாகும் .

இக்காரணங்கள் தவிர்ந்த இரண்டு வருட பிரிவு ஏழுவருட பிரிவின் கீழும் விவாகரத்து கோரலாம் என்றும் சில அரைகுறை அறிவாளிகள் கூறுவதுண்டு. அது தவறு. அக்காலங்கள் நடவடிக்கை எடுக்க உதவுவதே தவிர காரணங்களாக அமைவதில்லை.

மேலே கூறிய 3காரணங்களை நீதிமன்றம் திருப்திப்படும்படி நிரூபிக்க வேண்டும். அப்பொழுதே விவாகரத்து கிடைக்கும். அக்காரணங்களில் சோரம் போதல் அல்லது விபசாரம் நடந்தது என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க வேண்டும். ஆனால்

சில தீர்ப்புகள் குற்றவியல் வழக்கொன்றை நிரூபிக்கத் தேவையான அளவு நிரூபணம் தேவை இல்லாவிட்டாலும் ஒரு படி குறைந்த அளவு நிரூபணம் தேவையென பின்வரும் வழக்குகளில் நீதியரசர்கள் கூறியுள்ளனர்.

1. அலரம்மாள் எதிர் நடராசா என்ற வழக்கில் நீதியரசர் ரீ.எஸ்.பெர்னாண்டோ பின்வருமாறு கூறியுள்ளார். இந்த வழக்கில் எழுந்த வினா என்னவெனில் வழக்காளி சந்தேகத்திற்கு இடமற்றநிலையில் வழக்கை நிரூபிக்க வேண்டுமா என்பதேயாகும். இதற்கு நீதியரசர் கூறியது என்னவெனில் சோரத்தின் கீழ் விவாகரத்தை கோரும் ஒருவர் சந்தேகத்திற்கு இடமற்றவாறு வழக்கை நிரூபிக்க வேண்டுமென்ற பிரபுக்கள் சபை வழக்கானபிளித் எதிர் பிளித் வழக்கின் தீர்ப்பை எல்லா வழக்கிலும் பின்பற்ற வேண்டுமா என்று கேள்வி எழுப்பினார். ஏல்தகவு (Balance of Probabilities) முறையில் நிரூபிப்பது ஏற்கப் படவேண்டும் என்றும் தனது கருத்தை முன் வைத்தார்.
2. குணசேகர எதிர் குணசேகர என்பது மற்றைய வழக்காகும். இது பராமரிப்பு வழக்காகும். இவ்வழக்கில் நீதியரசர் வீரமந்திரி கூறியது என்னவெனில் சோரம் நடந்தது என்று கூறுபவர்கள் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபித்தல் அவசியம் என்றாலும் அதற்கு ஒருபடி கீழான சம பல சாட்சியங்களில் கீழ் நிரூபித்தாலும் ஏற்றுக் கொள்ளலாம் என்று தமது கருத்தை முன்வைத்துள்ளார் .

பேராசிரியர் லீ (Lee) யின் சோரம் பற்றிய கருத்து என்னவெனில் இயற்கையான வழியல்லாத வேறு வழிகளில் பாலியல் நடவடிக்கை இருப்பின் அதனையும் சோரத்திற்குள் கொண்டு வரவேண்டும் என்பதாகும். உதாரணமாக(Oral Sex) வாயைப் பாவிப்பது என்று கூறலாம். இது லீயின் உதாரணம் அல்ல. எனது உதாரணமாகும். அமெரிக்க ஜனாதிபதி ஒருவர் பாவித்தது இம்முறையே என்று கூறப்பட்டது.

ஆகவே இலங்கையில் சோரம் பற்றிய குற்றத்திற்கு தேவையான நிகழ்வுகளை ஆராய்ந்து பார்க்க வேண்டிய ஒரு காரணமாக அமைகிறது. அக்காரணம் சந்தேகத்திற்கு இடமற்றமுறையில் நிரூபிக்கப்பட வேண்டுமா அல்லது ஏல்தகவு(Balance of Probabilities) முறையிலும் நிரூபிக்கப்பட இடம் கொடுக்க வேண்டுமா என்பதுடன் வேறும் சில சூழ்நிலைகளில் நடைபெறும் பாலியல் நடவடிக்கைகள் அங்கீகரிக்கப்பட வேண்டுமா என்பவையாகும்.

சோரம் என்றால் என்ன?

சோரம் என்பதற்கு கொடுக்கப்படும் விளக்கம் என்னவெனில் தம்பதியர்களில் ஒருவர் தனது துணைவர் அல்லது துணைவியைத் தவிர்ந்த பிறர் ஒருவருடன்தன் சொந்த விருப்பத்துடன் பாலியல் இன்பத்தில் ஈடுபடுவதாகும் .

இது சில சந்தர்ப்பங்களில் அன்பாலும் நடைபெறுகிறது. சில சந்தர்ப்பங்களில் தவிர்க்க முடியாத சூழ்நிலைகளிலும் நடைபெற்று விடுகிறது. இரண்டு சந்தர்ப்பங்களையும் பார்ப்போம் .

மணம் முடித்த ஒருவர் இன்னுமொரு பெண்ணையும் தனது துணைவியாக வைத்திருத்தல் முடியுமா?

இது பல இடங்களில் நடைபெறுகிறது. பல இடங்களில் விவாகம் செய்த ஒருவர் தனது மனைவியின் சகோதரியுடனும் தொடர்பு வைத்து குழந்தைகளும் கிடைத்து விடுகின்றன. நான் தெரிபடும் நீதிமன்றம் ஒன்றில் சொந்த மனைவி தனது கணவன் தனது சொந்த தங்கையுடனும் குடும்பம் நடத்துவதாகவும் தன்னை கவனிப்பது குறைவு என்றும் சொத்துக்கள் பலவற்றை அவர் அவளுக்கு எழுதியுள்ளதாகவும் கூறி அழுதார். நான் அந்த வழக்கிற்கு தெரிபடவில்லை. நான் ஒரு வயதான ஆள் என்பதால் தனது நிலையை கூறினாள்.இந்த வழக்கு இன்னும் நடைபெறுகிறது. ஆகவே யார், எவர், எங்கே என்று என்னால் எழுத முடியவில்லை. இங்கு என்ன நடைபெறுகிறது? சட்டப்படி பார்த்தால் சோரத்தின் பொருள்கோடல்படி பார்த்தால் இங்கு சோரம் நடைபெறுகிறது. ஆனால் வழக்கை தாக்கல் செய்ய முடியாத நிலை நிலவுவதைக் காணலாம். வேறு ஒரு காரணத்தைக் கூறியே விவாகரத்து வழக்கை தாக்கல் செய்ய வேண்டியிருக்கிறது. இங்கு கணவன் தனது மனைவி மீது அன்பு இல்லை எனக் கூற முடியுமா? அதே நேரம் அவளது சகோதரியின் மீதும் அன்பு இல்லை என்று கூற முடியுமா? இங்கு நீதிமன்றம் விவாகரத்து வழக்கை தாக்கல் செய்தாலும் விவாகரத்தை வழங்க சில சங்கடங்களை சந்திக்க வேண்டியிருக்கும். சோரத்தின் கீழ் இவ்வழக்கை தாக்கல் செய்தால் முழு குடும்ப மதிப்பும் பாதிக்கப்படும் .

இன்னுமொரு வழக்கு

இக்குடும்பம் விலாசம் உள்ள குடும்பமாகும். ஊர் மக்கள் மதிக்கின்ற குடும்பமாகும். இக்குடும்பத்தில் பிறந்த ஒரு பையன் நன்றாகப் படித்து பொறியியலாளராக கடமையாற்றுவதாகவும் கூறப்படுகிறது. இவர் கல்வி கற்கும் காலங்களில் தனது கைபேசியில் ஆபாசப் படங்களைப் பார்ப்பதையும் ரசிப்பதையும் வழக்கமாக கொண்டவராவார். இவர் ஓர் அழகான மனைவியை மணந்தார். ஆனால் அந்த மணம் நீண்ட நாள் நீடிக்கவில்லை. பெண் விவாகரத்து கோரினாள். இதற்கு காரணமாக கூறப்பட்டது விவாகரத்துக்கு தேவையான மேலே கூறிய மூன்று காரணங்களுள் வர முடியாததாக இருந்த ஒன்றாகும். ஆனாலும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

பெண் தனது நிலையை எடுத்துக் கூறுகையில் தான் தொடர்ந்து அவருடன் வாழ்ந்தால் நீண்ட நாள் வாழ முடியாது என்றும் சாதாரணமாக அவர் கொடூரமானவர் இல்லை என்றும் ஆயினும் அவரது பாலியல் நடவடிக்கைகளால் தான் பாதிக்கப்படுவதாகவும் கூறினாள் .

கணவன் கைபேசியில் பார்க்கும் செயல்களை அவளுடனும் பகிர வேண்டும் என்று அவளிடம் கெஞ்சிக் கேட்பதால் தன்னால் தொடர்ந்தும் பாவம் செய்ய முடியாது என்றும் தான் அவர் மீது மிக அன்பு உள்ளவள் என்றும் ஆயினும் படுக்கை அறைக்குச் சென்றதும் பயந்தே படுத்துறங்க வேண்டியிருக்கிறது என்றும் கூறினாள் .

அவனோ அவள் இல்லாவிட்டால் வாழ்க்கையே இல்லையென்றும் தனது குடும்ப கௌரவம்

பாதிக்கப்படும் என்று நினைத்து வழக்கில் போட்டி போட்டானே தவிர அவளும் இன்பம் அனுபவிக்க வேண்டும் என்பதை மறந்து கைபேசி ஆபாசப் படத்தில் நடப்பவற்றை நடைமுறைப்படுத்துவதை நிறுத்த மறுத்து வந்தான். இவர்களுக்கு விவாகரத்து வழங்கலாமா?

இவர்களிடையே அன்பு இருக்கிறது. ஆட்டம் பிழையாக நடைபெறுகிறது. .

இன்னுமொரு வழக்கு

சந்தர்ப்ப சூழ்நிலையால் வாழ்வை இழந்த மாது. இது கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நடந்தது. வழக்காளியின் சார்பில் நானே சட்டத்தரணியாக இருந்தேன். வழக்காளிக்கு விவாகரத்து வழங்கப்பட்டது.

இவ்வழக்கின் நிகழ்வுகள்

இலங்கையைச் சேர்ந்த வழக்காளி பிரான்ஸில் வசித்து வந்தார். அவரது உறவினர்கள் அனைவரும் இலங்கையில் வடமாகாணத்தில் உள்ள ஓர் ஊரில் வசிக்கின்றனர்.

இவருக்கு விவாகம் பேசப்பட்டது. அழகான ஒரு பெண்ணை மணந்தார். அவளை உடனடியாக பிரான்ஸீக்கு கொண்டு போக முடியாமல் இருந்தது. இதனால் தனது மனைவியையும் தனது உறவினரான ஒரு பெண்ணையும் கொழும்பில் அறை ஒன்றை வாடகைக்கு எடுத்து அவர்களை அங்கு தங்க வைத்து விட்டு பிரான்ஸீக்கு சென்றார் .

பிரான்ஸீக்கு செல்ல தேவையான விசாவையும் மற்றும் தேவையான குடிவரவு – குடியகல்வு வேலைகளையும் கவனிக்குமாறு ஒரு நிறுவனத்திடம் கையளித்துவிட்டு சென்றார் .

விசா வேலைகளை கவனிக்க மேற்படி நிறுவனத்தில் இருந்து தினந்தோறும் திணைக்களங்களுக்கு ஒருவர் செல்வது வழக்கம். சில வேளைகளில் அவளும் அவரும் செல்வதும் உண்டு.

இவ்வாறு பெண்ணும் மற்றும் உதவிபுரிபவரும் சென்ற போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டு ஒரு நாள் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்கள். (ஏன் கைது செய்யப்பட்டார்கள் என்று எனக்கும் தெரியாது. நீங்களும் ஊகிக்கத் தேவையுமில்லை) இவர்கள் அன்று இரவு வீடு வராததால் பலரும் பலவிதமாக கதையைக் கட்டினர். இறுதியில் கணவன் தனக்கு அப்பெண் தேவையில்லை என்றும் விவாகரத்து பெற்றுத் தரும்படியும் கோரினார். பெண் செய்த தவறு என்ன என்று எனக்குத் தெரியாது. அதே போல் கணவனுக்கும் தெரியாது. ஆயினும் விவாகரத்துக்கு வழக்கை தாக்கல் செய்தபோது பெண்ணும் விவாகரத்தை வழங்காமல் தனது குற்றமற்ற தன்மையை கூற முற்பட்ட போதும் கணவன் அதனை ஏற்க மறுத்தான் .

வழக்கில் பெண்ணுக்கு பாரிய பிரிமனைப் பணம் வழங்கப்பட்டது. விவாகரத்தும் வழங்கப்பட்டது. தற்போது அப்பெண் யாழ்ப்பாணத்தில் கடை ஒன்றை நடத்தி வருவதாக சிலர் கூறுகின்றனர் .

விவாகரத்துக்கான காரணங்களை நிரூபிப்பது மிகக்கஷ்டம் அதனை ஊகத்தின் மூலமே நிரூபிக்க வேண்டும். உதாரணமாக ஒரு ஆணும் பெண்ணும்

தனியாக ஒரு இடத்திற்குள் நுழைகிறார்கள் என வைத்துக் கொள்வோம். அவர்கள் அங்கு என்ன செய்கிறார்கள் என்பதை நாம் காண முடியாது.சிலவற்றை ஊகிக்கலாம். சில வேளை அந்த ஊகம் பிழையாக இருக்கலாம். இருப்பினும் செய்வதற்கு வழியில்லை. சமூகம் அந்த ஊகத்தையே மனதில் வைத்திருக்கிறது. சில வேளை அந்த ஊகம் சரியாகவும் இருக்கலாம். .

மேலே கூறிய வழக்குகளிலிருந்து ஒரு விடயத்தை வாசகர்கள் மனதில்வைத்துக் கொள்ள வேண்டும். விவாகரத்து சட்டம் இறுக்கமானது. சமூகத்தின் கலாசாரத்தை பிரதிபலிப்பதாக இருக்கிறது. ஆகவே அச்சட்டத்தின் கீழ் வழக்கு ஒன்றுக்கு முகம் கொடுக்காமல் ஒருவர் வாழ்ந்தால் அதுவே பெரும் காரியமாகும். ஆயினும் இச்சட்டம் திருத்தப்பட வேண்டும். கால ஓட்டத்திற்கு தக சட்டங்கள் திருத்தப்படுவதில்லை. இது ஒரு பெரிய குறைபாடாகும். இந்த குறைபாட்டை சுட்டிக் காட்டிக் கொண்டு ஒருவர் தமது வாழ்க்கையை பாழடிக்கக்கூடாது. மனித உரிமை, பெண் உரிமை, தனி மனித சுதந்திரம் என்பவற்றை கோஷமாக கொள்ள வேண்டும். அவற்றை பெற முயற்சிக்க வேண்டும். ஆனால் அவற்றை பெறும்வரை வாழ்க்கையை பாழடிக்கக்கூடாது. நான் இவ்வாறு கூறுவதற்கு நல்ல காரணங்கள் உண்டு. இது சகலருக்கும் தெரியும்.

வாழ்வுக்கு பெற்றோரின் ஆசீர்வாதம் தேவை

விவாகரத்துக்கான காரணத்தை விசேடமாக சோரம் பற்றி மட்டும் நீங்கள் அறிந்தால் போதுமானதல்ல. விவாகத்தின் புனிதத்தையும் நீங்கள் அறிய வேண்டும்.

திருமண வாழ்வு பரிசுத்தமானது. அதன் உயரிய குறிக்கோள் ஆண்/பெண் அர்ப்பண உறவில் நிறைவேறி ஆசி பெறுகிறது. இதனால்தான் பண்டைக்காலத்தில் இருந்து எமது சமூகத்தில் விவாகத்தை நடத்துவதும் அதற்கு ஆசிர்வாதம் வழங்குவதும் எமது சமூகத்தில் நிலவுகிறது.

அம்மா என்பதற்கு அன்பு என்ற ஒரு அர்த்தமும் உண்டு தன் இரத்தத்தைபாலாக பிள்ளைக்கு கொடுப்பது தாயே. தனது உடலை வருத்தி 10 மாதம் குழந்தையை சுமப்பதும் அவளே.

அப்பா என்பதற்கு ஆசிர்வாதம் என்ற ஒரு அர்த்தமும் உண்டு. உண்ணாமல் உறங்காமல் தனது குடும்பத்தையும் பிள்ளைகளையும் நல்ல நிலைக்கு கொண்டுவர முயல்வதும் அவரே. ஆகவே அம்மா, அப்பா ஆகியோரின் ஆசீர்வாதமும் அன்பும் விவாகத்திற்கு அவசியமாகும். இதனாலேயே பெற்றோர் நிச்சயித்துள்ள திருமணம் என்று திருமண அழைப்பிதழில் கூறப்படுகிறது.

ஆனால் தற்போது சிலரது வாழ்வு அல்லது திருமணம் கைபேசியிலும் சுப்பிரமணியம்பார்க்கிலும்கஸ்னாபீச்சிலும் ஆரம்பமாகி நீதிமன்றத்தில் முடிவடைவதை நாம் காணலாம்.

மேலும் விவாகரத்துக்களின் தொகை இதனை எடுத்துக்காட்டுவதுடன் கருக்கலைப்பின் தொகையும் இதனைக் காட்டுகிறது. நவீன உலகில் வாழ்கிறோம் என்று கூறி தனக்கு பொருத்தமான ஒருவரை தான் படிக்கும் உயர்கல்வி நிலையத்திலோ பல்கலைக்கழகத்திலோ தொழில்புரியும் இடத்திலோ தெரிவு செய்வதில் தவறு இல்லை. ஆனால் இறக்கும்

வரையும் அதனை கொண்டு நடத்தாமல் விவாகரத்துக்கு போவதோ கெலை வழக்குக்கு போவதோ கூடாது. இங்கேதான் பிழை நடக்கிறது.

விவாகம் செய்த பலர் வாழ்வாதாரத்துக்காக தாம் தொழில்புரியும் இடத்தின் அதிகாரிகளுடன் முறையற்ற உறவு வைத்துள்ளதையும் நாம் அறிவோம். இதுபற்றி நன்கு அறிய வேண்டுமானால் டாக்டர் மு. வரதராசன் எழுதிய கரித்துண்டு என்ற நாவலை வாசிக்க வேண்டும். அக்கதையின் படி காரியாலயத்தில் நிர்வாக அதிகாரியை விட அவருடைய தட்டச்சுக்காரி அதிக செல்வாக்கு மிக்கவராக விளங்குவதைக் காணலாம். இதற்கு காரணம் தகாத உறவேயாகும்.சோரத்தை பற்றி ஆராயும்போது ஒருபால் புணர்ச்சியையும் அறிய வேண்டும்.

ஒருபால் திருமணம் அல்லது உறவு

தற்போது உலக நாடுகள் பலவற்றில் ஒருபால் திருமணம் நடைபெறுகிறது. அவர்களுக்கென்று சங்கங்கள்கூட இருக்கின்றன. முன்னைய பாப்பாண்டவர் ஸ்கொட்லாந்துக்கு விஜயம் செய்தபோது அந்நாட்டில் உள்ளவர்கள் ஆண்பால் திருமணத்தை அங்கீகரிக்க வேண்டும்என கோரிக்கை வைத்தனர். கத்தோலிக்க சமயம் முறையற்ற திருமண உறவை அங்கீகரிப்பதில்லை எனக்கூறி அக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

இவ்விடத்தில் ஆண் - ஆண் திருமணம் முறிவடையும் போது சோரத்தின் கீழ் விவாகரத்து பெற வேண்டுமா? அதற்குச் சட்டம் உள்ளதா என்ற விபரம் இல்லை.

இன்னுமொரு வினா சோரத்தில் எழுகிறது

ஒருவர் விவாகரத்தை பெறாமல் இன்னுமொரு பெண்ணுடன் விவாக பந்தத்தில் ஈடுபட்டிருந்தால் அவர் சோரம் புரிகிறார் என்று சட்டம் கூறும்.

சில வேளைகளில் அந்த இரண்டாவது பெண்ணை அவர் கள்ளமாக பொய் கூறி விவாகப் பதிவு செய்திருந்தாலும் அவர் சோரமே புரிகிறார் என்றே சட்டம் கூறும்.

ஆனால் அவர் இஸ்லாம் மதத்தை சேர்ந்தவராக இருந்தால் சோரக் குற்றச்சாட்டை அவர் மேல் சுமத்த முடியாது என சிலர் கூறுவதுண்டு. இது தவறு. இஸ்லாம் மதத்தை சேர்ந்தவர் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்ணை விவாகம் செய்யலாம். ஆனால் அது சட்டபூர்வமானதாக இருக்க வேண்டும். முன்னைய மனைவியிடம் இருந்து அனுமதி பெற்று அல்லது உரிய நீதிமன்றத்தில் அனுமதி பெற்று பின்னையவளை மணந்தால் ஒழிய மற்றையபடி அவர் குற்றம் செய்தவராகிறார்.

அபயசுந்தர எதிர் அபயசுந்தர வழக்கும் ரிட் எதிர் சட்டவாதிகள் என்ற வழக்கையும் வாசித்தால் இதனை கண்டு கொள்ளலாம்.

ஆகவே சோரம் போகும் குற்றத்திற்குள் வருபவர் யார் எனில் கணவன் தனது மனைவியல்லாத இன்னுமொருவருடன் பாலியல் உறவை வைத்திருப்பவர் என்று கூற முடியும்.

சில சமயங்களில் நீதிமன்றத்திற்கு இப்படியான வழக்குகள் வரும்போது தான் அவர்களைப் பார்த்து

கேட்கும் கேள்வி என்னவெனில் இந்த பூனையும் பால் குடிக்குமா என்றாகும்.

முதல் மனைவியிடமிருந்து விவாகரத்துப் பெறாமல் இன்னுமொருத்தியை மணந்தால் அதற்குரிய தண்டனை என்ன? .

கணவன் அல்லது மனைவி உயிருடன் இருக்கையில் அவளை கைவிட்டுவிட்டு விவாகரத்து பெறாமல் வேறு திருமணத்தைச் செய்து கொள்கிறவன் அல்லது மனைவி ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டனையை பெறுவர். மேலும் அபராதமும் விதிக்கப்படும்.

ஆனால் இதற்கு ஒரு புறநடையுண்டு. முதல் கணவன் அல்லது முதல் மனைவி ஏழு ஆண்டு காலம் உயிரோடு இருக்கிறாரா இல்லையா என்று கேள்விப்பட முடியாமலிருந்தால் அவர்களுக்கு இந்தப் பிரிவு செல்லாது.

தொகுப்புரை

விவாகரத்துக்கு தேவையான காரணங்களில் சோரம் போகுதல் என்பதும் ஒன்றாகும்.

சோரம் போகுதல் என்பது தனது துணைவர் அல்லது துணைவி இல்லாத ஒருவருடன் சுய விருப்பத்துடன் பாலியல் வல்லுறவில் ஈடுபடுவதாகும்.

சோரம் போகிறவர்களுக்கு விவாகரத்து வழங்கப்பதுவதுடன் இருதார மணத்திற்காக சிறைத் தண்டனையையும் கோரலாம் .

குடும்பத்திற்குள்ளேயே சோரம் நடைபெற்றால் அதனை வெளிக்கொணர்வது கஷ்டம் .

சோரத்தை நிரூபிக்க சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்க வேண்டும் என்ற கருத்து மாற்றப்பட வேண்டும் என்று நீதியரசர் ரி.எஸ்.பெர்னாண்டோவும் நீதியரசர் வீரமந்திரியும் கூறிய கருத்துக்கள் கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டும்.

தற்கால உலகில் ஆண் - ஆண் திருமண உறவு நடப்பது வழக்கம். அவர்களும் பிரிய வேண்டுமானால் விவாகரத்து பெற வேண்டுமா? .

சூழ்நிலைகளால் நடைபெறும் சோரத்திற்குரிய தண்டனை கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

விவாகம் ஆனது பெற்றோரின் ஆசீர்வாதத்துடன் நடைபெறுவதே நன்று.

எதிர்கால வாழ்க்கையை கொண்டு நடத்த இளைஞர்கள், யுவதிகள் ஒருவரை தெரிவு செய்வதில் தவறு இல்லை. ஆனால் அவர்களுடனேயே இறுதிவரை வாழ வேண்டும். .

விபசாரம் அல்லது சோரம்போதல் ஒருவருடன் உடல் உறவில் ஈடுபடும்போது மட்டுமே நடைபெறுகிறது என்பது தவறு. ஒருவனை அல்லது ஒருத்தியை இச்சையுடன் பார்க்கும்போதே சோரம் நடைபெற்று விடுகிறது என்ற விவிலியக் கூற்று உண்மையானது. இதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.